# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி20 ஞாயிற்றுக்கிழமை (05-08-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:252


## புலனாய்வு அமைப்புகள் எச்சரிக்கை

# சர்வஜன வாக்கெடுப்பில் அரசுக்கு வெற்றி கிட்டாது!

## 13லட்சம் வாக்குகளால் தோல்வியுற நேருமாம்

**கொழும்பு,ஓகஸ்ட்5**

**எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வ ஜன வாக்கெடுப்பில் சுமார் 13 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் அரசுத் தரப்பு தோல்வியடைய நேரும் என்று அரச புலனாய்வுச் சேவைகள் ஜனாதி பதிக்கு எச்சரிக்கைத் தகவல்களை அனுப்பியிருக் கின்றன.**

**பல அமைச்சர்களும் இத்தகைய எச்சரிக் கையை ஜனாதிபதியிடம் தெரிவித்திருக்கின்றனர்.**

இந்தத் தகவலை 'Colombo Page' இணையத் தளம் நேற்று வெளியிட்டது. அந்த இணையத் தளம் இது குறித்து மேலும் தெரிவித் திருப்பதாவது:-

ஓகஸ்ட் சர்வஜன வாக்கெடுப்பில் வெற்றி பெறுவது எட்டமுடியாத இலக்கு என்று அரச புலனாய்வு நிறுவனங்களுடன் பல அமைச்சர்க ளும் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவை எச்சரித்துள்ளனர்.

கடந்த தேர்தல் பெறுபேறுகள் மற்றும் அரசு இழந்து வரும் செல் வாக்கு ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது 13லட்சம் வாக்கு

(2ஆம் பக்கம் பார்க்க)

## முக்கிய வர்த்தகர்களை ஜனாதிபதி சந்திப்பார்

கொழும்பு,ஓக.5

நாட்டின் முக்கிய வர்த்தகர் களையும் உயர்நிலை அதிகாரிகளை யும் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க எதிர்வரும் 9ஆம் திகதி சந் தித்துப் பேசவுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நடை பெறவுள்ள இச்சந்திப்புக்கு முந்நூறு பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்கா விமானத்தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் மீதான புலிகளின் தாக்குதலை அடுத்து நாட்டின் பொரு ளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்தும் -

அவற்றைச் சமாளிப்பதற்கு அர சாங்கம் மேற்கொண்டுள்ள துரித நடவடிக்கைகள் குறித்தும் -

நாட்டின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பான அரசின் திட்டங்கள் குறித்தும் -

இந்தச் சந்திப்பில் வர்த்தகர்களுக் கும் உயர்நிலை அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி விளக்குவார் என்று கூறப் படுகின்றது.

தற்போதைய அரசியல் நிலை குறித்தும் ஜனாதிபதி அவர்களுடன் ஆராய்வார் என்றும் தெரிவிக்கப்படு கின்றது. (ம)

## நாகர்கோயில் பகுதியில் 'கிபிர்' விமானக் குண்டுவீச்சு!

கொழும்பு,ஓக.5

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான 'கிபிர்' யுத்த விமானங் கள் நேற்றும் நேற்று முன்தினமும் நாகர்கோயில் பகுதியில் தாக்குதல் நடத்தியுள்ளன.

நேற்று முன்தினம் நாகர்கோயி லிலுள்ள புலிகளின் முன்னணிக் காவ லரண்கள் மீது தாக்குதல் நடத்தப் பட்டதாகவும் -

நேற்று நாகர்கோயிலில் உள்ள புலிகளின் 'ராடர்' நிலையங்கள் மீது தாக்குதல் இடம்பெற்றதாகவும் -

இந்தத் தாக்குதலில் புலிகளின் 'ராடர்' நிலையம் ஒன்று முற்றாக அழிக்கப்பட்டதாகவும் -

விமானப்படை வட்டாரங்கள் தெரி வித்தன. (ம)

### நேற்று நடந்த தெரிவின் பிரகாரம்

## முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் தானே என்கிறார் ஹிஸ்புல்லா!

### இல்லை என மறுக்கிறார் ஹக்கீம்

கொழும்பு,ஓக.5

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைச் செயலகமான தாரு ஸ்லாமில் நேற்று நடைபெற்ற கூட் டம் ஒன்றில் அக்கட்சியின் தலை வராக முன்னாள் பிரதி அமைச்சரும் அமைச்சர் பேரியல் அஷ்ரப்பின் அணியைச் சேர்ந்தவருமான ஹிஸ் புல்லா அக்கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று அவ ரின் சார்பில் நேற்று செய்தி நிறுவ னங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட் டிருந்தது.

செயலாளர் நாயகமாக எம்நிஸாம் ஹாஜியாரும் -

சிரேஷ்ட துணைத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் என்.எல். எம்.ஹனீபாவும் -

துணைத் தலைவர்களாக நாடா ளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.அபு சலாம், நாடாளுமன்ற உறுப்பினர் யு.எல்.எம்.முகைதீன் ஆகியோரும், மறைந்த அஷ்ரப் - அமைச்சர் பேரி யல் அஷ்ரப் தம்பதிகளின் மகனான அமான் அஷ்ரப்பும் -

தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் அறி விக்கப்பட்டது.

பேரியல் அஷ்ரப் சார்புக் குழுவி

(2ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோ முகாம் மீது வவுனியாவில் சூடு!

### வரதர் அணியினர் நடத்தினராம்

வவுனியா,ஓக.5

வவுனியா வைரவப்புளியங்குளத் தில் உள்ள ரெலோ முகாம் மீது ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி) உறுப்பினர்கள் சிலர் நேற்றுக் காலை 10 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று சில செய்தி ஏஜென்ஸிகள் நேற்று தகவல் வெளியிட்டன.

முகாமின் பின்புறம் உள்ள காவல் நிலையத்தை நோக்கி இந்த தாக் குதல் நடத்தப்பட்டதாக 'புளொட்' அமைப்பினர் தெரிவித்தனர்.

(2ஆம் பக்கம் பார்க்க)

# வேலைநிறுத்தப் போராட்டங்களில் குதிக்க பல தொழிற்சங்கங்கள் தயாராகுகின்றன

கொழும்பு,ஓக.5

நாடு பெரும் அரசியல் நெருக்க டியை எதிர்கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் - அடுத்து வரும் நாள்களில் - வேலைநிறுத்தப் போராட்டங்களில் குதிப்பதற்கு பல தொழிற்சங்கங்கள் தயாராகி வருவ தாகக் கொழும்புத் தகவல்கள் தெரி விக்கின்றன.

கட்டுநாயக்கா விமானத் தளத் தாக்குதலால் ஏற்பட்ட இழப்புகளைச் சமாளிப்பதற்காகக் கொழும்பு மற் றும் துறைமுகங்களில் கப்பல் தரித்து செயற்படுவதற்கான கட்ட ணங்களை அரசு அதிகரித்திருப்ப தால் ஏற்பட்டிருக்கும் பின்னடைவு களுக்கு மத்தியில் கொழும்புத் துறைமுகத்தின் ஜெயா இறங்கு துறையில் பணிபுரியும் ஊழியர்கள் கடந்த நான்கு தினங்களாக வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

துறைமுக ஊழியர்களின் சேவை அத்தியாவசிய சேவை என்று பிர கடனப்படுத்தியும் -

வேலைக்கு ஊழியர்கள் திரும்பா விட்டால் அவர்கள் பதவி இழந்தவர் களாகக் கருதப்படுவர் என்றும், அவர் களது இடங்களுக்குப் புதியவர்கள் நியமிக்கப்படுவர் என்றும் அறிவித் தும் -

அரசுத் தரப்பினால் மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ள போதும் துறை முக ஊழியர்கள் தமது வேலைநிறுத் தத்தைக் கைவிடாது அதில் முனைப் பாக இருக்கின்றனர்.

இதேபோன்று வண.முருத்தெட் டுவே ஆனந்த தேரர் தலைமையி லான - பலம்மிக்க - தாதியர் சங்க மும் பத்து முக்கிய கோரிக்கை களை முன்வைத்து, அவை நாளை மறுதினத்துக்கு முன்னர் நிறைவு செய்யப்படாவிட்டால் இரண்டு நாள் வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்துள்ளது.

இதேபோன்று தமது அடிப்படைச் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்து அரசாங்க சேவை தொழிற்சங்கங்க ளின் கூட்டமைப்பும் வேலைநிறுத் தத்துக்கு தயாராகி வருகின்றது.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் கோரிக்கைக்கு அரசு சாதகமாகப் பரிசீலிக்கத் தவறுமேயானால், முதலில் சுகவீன லீவுப் போராட்டத்தில் அரச ஊழி யர்கள் குதிப்பர் என்றும் -

அது பின்னர் விஸ்தரிக்கப்படும் என்றும் - தொழிற்சங்கங்கள் கூட்ட மைப்பின் பிரதிநிதி அமரசிறி கொட் டேகொட தெரிவித்தார். (உ)

### மன்னாரில் துண்டுப் பிரசுரம்

வவுனியா,ஓக.5

மன்னார் நகரப் பகுதியில் நேற்று விடுதலைப் புலிகளின் துண்டுப் பிர சுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

'தேசத்தின் தேவையை உணர்ந்து வெற்றிக்காக அணி திரள்வோம்' என்ற தலைப்பில் இந்தத் துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டிருந்தது. புலி களின் மன்னார் மாவட்ட அரசியல் துறை இந்தப் பிரசுரத்தை வெளியிட் டுள்ளது. (ம)

### வவுனியாவில் விமானப்படையினர் 8 பேர் காயம்

வவுனியா,ஓக.5

வவுனியா பூவரசங்குளத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கிளை மோர் தாக்குதலில் 8 விமானப் படை யினர் காயமடைந்தனர் என்று இராணு வப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரத்தின தெரிவித்தார்.

காயமடைந்தவர்கள் அனைவரும் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ம)

### பிக்குகள் கொழும்புக்கு படையெடுப்பர்?

கொழும்பு,ஓக.5

எதிர்வரும் 21 ஆம் திகதி நடை பெறவிருக்கும் சர்வஜன வாக்கெடுப்பை வாபஸ் பெறும்படி ஜனாதிபதியிடம் கூட்டாகக் கோருவதற்காக நாளை மறுதினம் ஆயிரக்கணக்கான பிக் குகள் கொழும்புக்கு படையெடுப்பர் என்று செய்தி நிறுவனம் ஒன்று நேற்று அறிவித்தது.

சர்வஜன வாக்கெடுப்பை வாபஸ் பெறும்படி கத்தோலிக்க ஆயர்களும் கேட்டிருப்பதாக அந்தச் செய்தி நிறு வனம் மேலும் குறிப்பிட்டது. (உ-ம)

### கிளாலியில் கிரனேட் வீச்சு!

கிளாலியில் கடந்த வியாழனன்று இரவு 11 மணிக்கு விடுதலைப் புலி கள் கிரனேட் வீச்சுத் தாக்குதல் நடத்தியதாக விசேட ஊடகத் தக வல் மையம் அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் மூன்று படை யினர் காயமடைந்தனர். மூவரும் பலாலி வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளனர் என்றும் தகவல் மையம் மேலும் தெரிவித்தது. (ம)

### மனோரஞ்சனுக்கு பயமுறுத்தலாம்!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தா பனம், ரூபவாஹினிக் கூட்டுத்தாப னம் என்பவற்றின் பணிப்பாளர் சபை உறுப்பினரும் 'அமுது' சஞ்சிகை ஆசிரியருமான எஸ். மனோரஞ்சனுக் குத் தொலைபேசியில் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதா கத் தெரிவிக்கப்படுகின்றது.

கலந்துரையாடல் ஒன்றில் தான் கருத்துத் தெரிவித்த பின்னர் தனது செலூலர் தொலைபேசிமூலம் இந்தப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டதாக மனோரஞ்சன் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப் பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்த னாவின் வீட்டுத்தொலைபேசியில் இருந்தே இந்தப் பயமுறுத்தல் விடுக் கப்பட்டதைத் தனது செலூலர் தொலைபேசி மூலம் தான் கண்டு பிடித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

### செவ்வாயன்று பதிவு இல்லை

விமானம் மூலம் கொழும்பு செல் வோரின் எண்ணிக்கை அதிகரித்தி ருப்பதை அடுத்து நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை விமானப்பதிவுகள் இடம்பெறமாட்டாது என 'ரான்' அலு வலகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி வரை யில் நடைபெறவுள்ள விமான சேவை களுக்கான பதிவுகள் அனைத்தும்

(2ஆம் பக்கம் பார்க்க)

# 'கிறீன் காட்' லொத்தர்முறை மூலம் அமெரிக்காவில் குடியேற வாய்ப்பு

## இலங்கையர்கள் ஒக்ரோபரில் விண்ணப்பிக்கலாம்

கொழும்பு,ஓக.5

அமெரிக்காவில் குடியேற விரும்புவோரை வருடந்தோறும் லொத்தர் முறை மூலம் தெரிவுசெய்யும் முறைக்கு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் விண்ணப்பங்களை அனுப்பலாம் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

'கிறீன் காட்' லொத்தர் முறை மூலம் அமெரிக்காவில் குடியேறுவதற்காக விண்ணப்பித்த இலங்கை நாட்டவர்கள் பலரின் விண்ணப்பங்கள் கடந்த காலங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

விண்ணப்பம் செய்ய விரும்புவோர் தமது விண்ணப்பங்களை 'DV-2003, PROGRAM, KENTUCKY, CONS ULARCENTER, 2002 VISACREST, MIGRATE, KY 41902 - 2000, U.S.A.' என்ற முகவரிக்கு ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்பு அமெரிக்காவில் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரியின் முழுப்பெயர், பிறந்த திகதியும் இடமும், பிள்ளைகளின் பெயர், பிறந்த திகதியும் இடமும், முகவரி, 2 அங்குல சதுரமான புகைப்படம் (புகைப்படத்தின் பின்புறம் பெயரும் பிறந்ததிகதியும் எழுதப்படவேண்டும்) போன்றவற்றுடன் விண்ணப்பங்களை சாதாரண தபாலில் அனுப்பிவைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

# பருத்தித்துறை வங்கிக் கிளையில் வெளிநாட்டுக் கணக்கு ஆரம்பம்

நெல்லியடி,ஓக.5

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் முதல் தடவையாக, கடந்த புதனன்று வெளிநாட்டு வங்கிக் கணக்கு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் இலங்கை வங்கி ஆரம்பிக்கப்பட்டு, 62ஆவது அாப்பண சேவை வைபவமும் அன்று முற்பகல் 11 மணிக்கு, வங்கி முகாமையாளர் ஏ.ரி.ஏ.தேவராஜா தலைமையில் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் இலங்கை வங்கியின் யாழ்.பிரதேச முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

வெளிநாட்டில் பணிபுரியும் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த இருவர் தமக்குரிய சேமிப்புக் கணக்கை ஆரம்பித்து வைத்தனர். இவர்களுக்குரிய வைப்புச் சான்றிதழ்களை இலங்கை வங்கியின் யாழ்.பிரதேச முகாமையாளர் கையளித்தார்.

பருத்தித்துறை இலங்கை வங்கி உதவி முகாமையாளர் எஸ்.சிவநாதன் நன்றியுரை வழங்கினார்.(ஐ-109)

### தமிழ் இளைஞர் தலைவெட்டிக் கொலை:

# காவலிலுள்ள 6படையினரும் தொடர்ந்து விளக்கமறியலில்!

மட்டக்களப்பு சித்தாண்டியில் கடந்த வருடம் இளம் குடும்பஸ்தர் ஒருவர் படையினரால் கழுத்து துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட ஆறு இராணுவத்தினரும் கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர் செய்யப்பட்டபோது அவர்களை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் எஸ்.ஏ.அப்துல் கபூர் உத்தரவிட்டார்.

இவர்களைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கவேண்டும் என அரச சட்டத்தரணி சுகந்தி கந்தசாமி நீதிபதியைக் கேட்டுக்கொண்டதையடுத்து இந்த உத்தரவை நீதிபதி வழங்கினார்.

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 8ஆம் திகதி சித்தாண்டியில் இராணுவத்தினருக்கு எதிரான தாக்குதலையடுத்து வயலில் வேலை செய்துகொண்டிருந்த அருணாசலம் சந்திரமோகன் (வயது21) என்பவர் கொல்லப்பட்டார். இவரை சுட்டுக்கொன்ற படையினர் இவரின் தலையை வெட்டிக்கொண்டு சென்றனர் என்று கூறப்படுகின்றது. அவ்வேளை மாடு மேய்த்துக் கொண்டிருந்த பொன்னுத்துரை சந்திரகுமார் (வயது14) என்பவர் அளித்த சாட்சியத்தின்படி 6 படையினர் கைது செய்யப்பட்டனர். சித்தாண்டி இராணுவ முகாமைச்சேர்ந்த டி. கருணாதாஸ, டபிள்யூ.ஏ.பி.சரத்குமார, ஏ.சனக்குமார, எச்.எம். சந்திரசிறி ஹேரத், எம்.எல். விஜயதுங்க, பி.விக்கிரமசிங்க ஆகியோரை கைது செய்த ஏறாவூர் பொலீஸார் இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்திருந்தனர். (உ-21)

## செவ்வாயன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவடைந்துவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

கப்பல் மூலம் திருகோணமலை செல்லும் பயணிகள் அதிக எண்ணிக்கையான கடிதங்கள், தொழில்நுட்ப சாதனங்கள், பிறருடைய ஆவணங்கள், ஓடியோ, வீடியோ சாதனங்கள், ஒளிப்பட 'நெக்கற்றிவ்'கள் என்பவற்றை எடுத்துச் செல்ல வேண்டாம் என்றும் - 'றான்' அலுவலகம் பயணிகளை அறிவுறுத்தி உள்ளது. (ஐ-7)

## ரெலோ முகாம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாக்குதலை நடத்திவிட்டுச் சென்ற வரதர் அணி உறுப்பினர்கள் சிறிது நேரத்தின் பின் மீண்டும் அந்த இடத்துக்கு வந்து அந்த முகாமின் முன்பகுதியில் நின்றிருந்த புளொட் உறுப்பினர்கள் மூவரை தாக்கியதாகவும் -

இதனால் காயமடைந்த மூவரும் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாவும் -

ரெலோ தலைவரும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

எதிர்வரும் 8ஆம் திகதி கொழும்பில் பத்துத் தமிழ்க் கட்சிகள் ஒன்றுகூடி நடத்த உள்ள கூட்டம் குறித்து வவுனியாவில் உள்ள ஐந்து கட்சிகளின் பிரதிநிதிகள் ரெலோ அலுவலகத்தில் நேற்றுக் கூடி ஆராய இருந்தனர். இந்தக் கூட்டம் நடைபெறுவதற்கு சற்று முன்னதாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதேவேளை -

இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்பையும் கலந்து பேசி ஒரு சுமுகமான தீர்வை எட்ட உதவுமாறும் -

இது குறித்து விசாரணைகளை நடத்தி உடனடியாகத் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் -

வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் 221ஆவது படையணித் தளபதிக்கு உத்தரவிட்டுள்ளார். (ம-9)

## சர்வஜன வாக்கெடுப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களால் 'பானை' வெல்லும் என்று மதிப்பிடக் கூடியதாக இருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த தேர்தலில் ஜனாதிபதியின் பலம்மிக்க கம்பஹா மாவட்டம் உட்பட 16 மாவட்டங்களில் எதிரணிக் கூட்டணியிலும் பார்க்க அதிகமான வாக்குகளை ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியால் பெற்றுக்கொள்ளமுடியவில்லை.

காலி, மாத்தறை, இரத்தினபுரி, மாத்தளை, நுவரெலியா, திகாமடுல்ல ஆகிய மாவட்டங்களில் மட்டுமே அரசுத் தரப்பினால் எதிரணியிலும் விட அதிக வாக்குகளைப் பெற முடிந்தது. இவற்றில் காலி, மாத்தறை தவிர்ந்த ஏனைய இடங்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இ.தொ.காவின் ஆதரவே அரசுத் தரப்புக்கு வெற்றியை ஈட்டித் தந்தது.

இந்த இரண்டு கட்சிகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சர்வஜன வாக்கெடுப்பில் அரசுக்கு எதிராக வாக்களிக்கப்போவதாக ஏற்கனவே அறிவித்துவிட்டது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் கடந்த வாரம் ஐ.தே.கட்சித் தலைவரைச் சந்தித்துள்ளது. பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பான 'விளக்கு' சின்னத்தை ஆதரிக்கப் போவதில்லை என்று இ.தொ.கா. கோடி காட்டியுள்ளது.

கடந்த தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா. ஆகியவற்றின் ஆதரவுடன் போட்டியிட்ட பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 39லட்சம் வாக்குகளைப் பெற்றது. இம்முறை 32 முதல் 35 லட்சம் வாக்குகளுக்கு அதிகம் பொ.ஐ.முன்னணியால் பெறமுடியாது என்று அரச புலனாய்வு அதிகாரிகள் மதிப்பிடுகின்றனர்.

- எதிரணிக் கூட்டுக்கு 40 லட்சம் முதல் 45 லட்சம் வாக்குகள் கிடைக்கும் என எதிர்வு கூறப்படுகின்றது.

அரசுத் தரப்பில் சர்ச்சையில் சிக்கியிருக்கும் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்காவும் மற்றும் தினேஷ் குணவர்த்தனாவும் சர்வஜன வாக்கெடுப்பில் வெற்றி பெறுவதிலுள்ள சிக்கல்கள், நெருக்கடிகளை விளக்கி ஜனாதிபதிக்கு 'மெமோ' ஒன்று அனுப்பியுள்ளனர்.

- இப்படி அந்த இணையத் தளம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதார நிலைமை மிகவும் மோசமடைந்திருப்பது -

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வராமல் இருப்பது -

போன்ற காரணங்களால் கடந்த பொதுத் தேர்தலில் பெற்றதை விடவும் மிகக் குறைந்த அளவு வாக்குகளையே அரசுத் தரப்பு பெறும் என்று வேறு சில செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன. (உ-ம)

### கட்டுநாயக்கா தாக்குதலின் போது

# உயிரிழந்த புலிகள் இயக்க உறுப்பினரிடம் 'செலூலர்'

கட்டுநாயக்கா விமானத்தளம் மீதான தாக்குதலின் போது உயிரிழந்த விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரின் நீளக்காற்சட்டையினுள் இருந்து "செலூலர்" தொலைபேசி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

மேற்படி தாக்குதல் சம்பவம் குறித்து விசாரணை நடத்திவரும் பொலீஸார் 'செலூலர்' தொலைபேசியின் உரிமையாளர் பற்றிய விவரங்களைக் கண்டுபிடித்துள்ளனர் என்றும் -

இந்தத் தொலைபேசி நீர்கொழும்பில் உள்ள தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

செலூலரைக் கொள்வனவு செய்த நபர் அடையாள அட்டை ஒன்றின் போட்டோ பிரதியைச் சமர்ப்பித்துள்ளதை அடுத்து, அதில் குறிப்பிட்டபடி கொட்டாஞ்சேனைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றைப் பொலீஸார் முற்றுகையிட்டபோது அங்கு எவரும் காணப்படவில்லை என்றும் -

இதனை அடுத்து செலூலரை விற்பனை செய்ததாகக் கூறப்படும் நீர்கொழும்பு தொலைத்தொடர்பு நிலையத்தின் உரிமையாளரான தமிழர் ஒருவர் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் -

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்த தினமான 24ஆம் திகதிக்குப் பின் இந்த செலூலர் தொலைபேசி பயன்படுத்தப்படவில்லை. அதற்கு முன் ஒரு இலக்கத்துடன் ஒரே தடவையில் பல மணி நேரம் உரையாடல் நடத்தப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆகையால் செலூலர் தொலைபேசி மூலம் எடுக்கப்பட்ட அழைப்புகள் குறித்து அதனை விற்பனை செய்த கம்பனியுடன் தொடர்புகொள்ள பொலீஸார் முயற்சி செய்து வருகின்றனர். இந்த செலூலர் தொலைபேசி மூலம் விசாரணையில் ஒரு திருப்பம் ஏற்படலாம் எனப் பொலீஸார் நம்பிக்கை கொண்டுள்ளனர். (ஐ-7)

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


னரால் வெளியிடப்பட்ட இந்த அறிவிப்பு முற்றிலும் தவறானது என்றும்-

சட்டவிரோதமான இத்தெரிவு குறித்து, முஸ்லிம் காங்கிரஸ் - தேசிய ஐக்கிய முன்னணி பிரச்சினை பற்றி விசாரணை நடத்தி வரும் நீதிமன்றத்திடம் தான் முறையிடப்போவதாகவும் -

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவராகச் செயற்பட்டுவரும் முன்னாள் அமைச்சரும் எம்.பியுமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். (உ)


## 83ஆவது பிறந்தநாள் அழைப்பு

### கணபதி கந்தையா



இன்று (2001 ஆவணி மாதம் 5ஆம் திகதி) ஞாயிற்றுக்கிழமை எனது 83ஆவது பிறந்தநாளை வெகு சிறப்பாக கொண்டாட விரும்புகின்றேன். உற்றார், உறவினர், நண்பர்கள், எல்லோருக்கும் அறியத்தருகின்றேன்.

க.கந்தையா.

தற்காலிக முகவரி:
*ஆலடி உடுவில்,*
*முருகமூர்த்தி முகாம்,*
*உடுவில் தெற்கு.* (90857)

நிரந்தர முகவரி:
*சரசாலை தெற்கு,*
*தெய்வங்கேணி வீதி, சாவகச்சேரி.*


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சரவணப்பெருமாள்

தெல்லிப்பழை பார் மணியம் வீதியைச் சேர்ந்த கந்தையா சரவணப்பெருமாள் 02.08.2001இல் காலமாகிவிட்டார்.

அன்னார் அருந்தவநாயகியின் அன்புக் கணவரும் லோகேஸ்வரன், திருமதி சுந்தரராசா(ஆசிரியை, யா/ பெரியபுலம் ம.வி.) ஆகியோரின் தகப்பனாரும், பரமசாமி சுந்தரராஜாவின் மாமனாரும் தனுராஜா, தர்ஷிகா, தனுசியன், தனுபரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மாதனை பருத்தித்துறையில் 03.08.2001 இல் நடைபெற்றது.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் கிழக்கு, தலையாழி.
*ஞானவைரவர் கோயிலடி,*
*கொக்குவில்.* (90856)

தகவல்:
அருந்தவநாயகி,
(மனைவி)
பிள்ளைகள்.

## செல்லப்பா கனகரத்தினம்

யாழ்ப்பாணம் உடுவிலைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் தற்போது 24, மூவர்ஸ் வீதி, வெள்ளவத்தையில் வசித்து வந்தவருமான செல்லப்பா கனகரத்தினம் நேற்றுக் காலமானார்.

அன்னார் முத்தாச்சியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்புச் சகோதரனும், இராமநாதன் (ஓமான்), மனோகரநேரு (யாழ்.கல்வி அலுவலகம்), விக்கினராசா (Md Muffadal Traders), தவேந்திரன் (Sea Street), சண்முகதாசன் (London) ஆகியோரின் அன்புத் தந்தையும் மதிவதனா, புனிதவதி, மலர்வதனி, நாகேஸ்வரி, ஜீவகி ஆகியோரின் மாமனாரும் அபிராமி, அகல்யா, பிரணவன், உமேசன், ஸ்ரீகணன், கிரித்திக்கா, அபர்ணா, கபிலன், செந்தூரன் ஆகியோரின் ஆருயிர் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (06.08.2001) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பொரளை கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

24, மூவர்ஸ் வீதி,
கொழும்பு - 06
தொலைபேசி - 503853

*11 A, இரண்டாவது சப்பல் வீதி,*
*கொழும்பு - 06*
*தொலைபேசி - 586646*

தகவல்:
மனோகரநேரு
(மகன்)

(C/17721)


## திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

### தொடர் நிகழ்வுகள்

(இன்று ஞாயிறு முதல் வெள்ளி வரை)

05.08.2001 - ஞாயிற்றுக்கிழமை
'கலா முற்றம்' திறப்பு விழாவும், ஒன்றுகூடலும்
நேரம் : மாலை 5.00 மணி

06.08.2001 - திங்கட்கிழமை
"அடக்கம் செய்யப்பட்ட கனவுகள்"
கவிதை அனுபவம்:- ம.சாம் பிரதீபன்
நேரம் : மாலை 5.15 மணி

07.08.2001 - செவ்வாய்க்கிழமை
"வெளிநாட்டு கலைப் பயணம்"
அனுபவப் பகிர்வு:- செல்வி றஜீத்கா பிரேமலதா
நேரம் : மாலை 5.15 மணி

08.08.2001 - புதன்கிழமை
"தலைமைத்துவம்"
கருத்தரங்கு - கருத்துரை: அருள்திரு.நீ.மரியசேவியர் அடிகள்
நேரம்: மாலை 5.15 மணி

09.08.2001 - வியாழக்கிழமை
"பாரம்பரிய கலைகள் பயிலரங்கு"
ஆரம்ப வைபவம்
நேரம்: மாலை 4.00 மணி

10.08.2001 - வெள்ளிக்கிழமை
"அண்மைக்கால தமிழ்ச் சஞ்சிகைகள்"
ஒரு பார்வை: யோ.யோண்சன் ராஜ்குமார்

★ அனைத்து நிகழ்வுகளும் இல.15, நக்கா வீதியிலுள்ள எமது கலா முற்றத்தில் நடைபெறும்.

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*238, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம். தொலைபேசி 021 - 2393*

- திருமறைக் கலாமன்றம்.

(C/17716)

# அமெரிக்கா - ஜப்பான் பேச்சு குறித்து சீன அரசு அதிருப்தி

## தனது செல்வாக்கைக் குலைக்கும் செயலாம்

பெய்ஜிங்,ஒக.5

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளிடையே பலதரப்பு பாதுகாப்புப் பேச்சுகள் நடத்தும் யோசனை குறித்து சீனா கவலை தெரிவித்துள்ளது.

சமீபத்தில் அமெரிக்க, ஆஸ்திரேலியா அமைச்சர்கள் கூட்டத்தில், மூன்று நாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்புப் பேச்சுத் திட்டங்கள் குறித்த ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

இது குறித்து சீன வெளியுறவுத் துறை தனது கடும் அதிருப்தியையும், கவலையையும் தெரிவித்துள்ளது.

பேச்சுக்கான எந்த ஒரு வடிவமும், ஆசிய பசிபிக் பகுதிகளில், சமாதானத்தைக் காப்பதாக அமைய வேண்டும் என்பதில் சீனா அக்கறை கொண்டுள்ளதாகவும் - சீன வெளியுறவு அமைச்சு மேலும் தெரிவித்தது.

அமெரிக்க, ஜப்பானிய இராணுவக் கூட்டணி குறித்தும், ஆசிய - பசிபிக் பிராந்தியத்தில் ஜப்பானின் ஆதிக்கம் குறித்தும் சீனா எச்சரிக்கையாக இருப்பதாகவும் -

அமெரிக்காவுடன் இப்பகுதி நாடுகள் ஏற்படுத்தும் பாதுகாப்புக் கூட்டணிகள் சீனாவின் ஆதிக்கத்தைக் குலைக்க எடுக்கப்படும் முயற்சி என்று சீனா நம்புவதாகவும் -கருதப்படுகிறது. (ஓ)



பலஸ்தீனக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள நப்லஸ் நகரில் "ஹமாஸ்" இயக்க அலுவலகம் மீது சமீபத்தில் இஸ்ரேல் இராணுவம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதில், 8 வயது மற்றும் 10 வயதுச் சிறுவர்கள் இருவர் உட்பட 8 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலின்போது காயமடைந்த பெண் ஒருவரை, பலஸ்தீன அதிகாரி மீட்டுத் தூக்கிவருவதைப் படத்தில் காணலாம். (ஓ)

# பூலானின் சொத்துக்காக முட்டிமோதும் உறவினர்

புதுடில்லி,ஒக.5

பூலான்தேவி இறந்து சிலநாள்களே ஆகியுள்ள நிலையில், அவரது சொத்துக்களுக்கு உரிமை கோருவதில் பூலான்தேவியின் உறவினரிடையே போட்டி எழுந்துள்ளது.



பூலான் தேவியின் வங்கிக் கணக்கில் ஒரு கோடி இந்திய ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது.

பூலான் தேவியின் கதையை 'பண்டிட் குயின்' என்ற பெயரில் திரைப்படமாக எடுத்த இயக்குநர் சேகர் கபூர், கதைக்காக பூலான்தேவிக்கு வழங்கிய உரிமப்பங்குத் தொகையே இந்தப் பணம் என்று கருதப்படுகிறது.

இதைத் தவிர நிலம் உட்பட சில சொத்துக்களும் பூலான்தேவிக்கு உள்ளது. இவற்றுக்காகவே அவரது உறவினர்கள் முட்டிமோத ஆரம்பித்துள்ளனர்.

இதற்கிடையில் பூலான்தேவிக்கு 11 வயதாக இருந்த போது, அவரை மணம் முடித்த முதல் கணவரான புத்திலாலின் திருமண உறவு சட்டப்படி முறியாததால், பூலான் தேவியின் சொத்துகளுக்கு வாரிசாக புத்திலாலுக்கு அதிக வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகிறது.

தனது முதற்கணவரிடமிருந்து பிரிந்து, பின்னர் கொள்ளைக்காரி யாக மாறிய பூலான் தேவி, ஒருமுறை புத்திலாலை கடுமையாகத் தாக்கி அவமானப்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## பொஸ்னியப் படுகொலைகள் தொடர்பாக

# செர்பிய இராணுவ அதிகாரிக்கு 46 வருடச் சிறைத்தண்டனை

ஹேக்,ஒக.5

பொஸ்னியாவில் 1995ஆம் ஆண்டு ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்களைக் கொன்று குவித்த குற்றத்துக்காக செர்பிய இராணுவ அதிகாரி ரடிஸ்லாங் கோர்ஸ்டிக் என்பவருக்கு ஹேக் சர்வதேச நீதிமன்றம் 45 வருடசிறைத்தண்டனை விதித்துள்ளது.

பொஸ்னிய முஸ்லிம்கள் மீது செர்பிய அரசு மேற்கொண்ட இன ஒழிப்பு நடவடிக்கையில் முக்கிய பங்காற்றியவர்களில் கோர்ஸ்டிக்கும் ஒருவர் எனக் கூறப்படுகிறது.

1995 காலப்பகுதியில் பொஸ்னிய சேர்பியர்களின் இராணுவத் தளபதி ரடோ மிலாபிக்கின் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் கோர்ஸ்டிக் செயற்பட்டு வந்தார்.

அப்போது ஜெனரல்கோர்ஸ்டிக் அட்டூழியங்கள் புரிந்ததாக நீதிபதி அல்மிரோ ரொட்டிகள் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

எஸ்ரெபி ரெனிகா நகரில் யுத்தத்தில் ஈடுபடும் திறன் கொண்ட சகல ஆண்களையும் கொலை செய்யும் திட்டத்துக்கு கோர்ஸ்டிக் இணங்கியதாகவும்

செர்பியர்களிடமிருந்து உயிர்தப்ப முயன்ற ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட பொஸ்னிய இஸ்லாமிய ஆண்கள் கைது செய்யப்பட்டு தலைகள் துண்டிக்கப்பட்டதாகவும் -

நீதிமன்றத்தில் சாட்சியங்கள் தெரிவித்திருந்தன.

இதனைத்தவிர, விசாரணையாளர்கள், சம்பவங்கள் நடைபெற்ற பகுதிகளுக்கு நேரில் சென்று ஆராய்ந்ததில அதிர்ச்சியூட்டும் பல தடயங்களைக் கண்டுபிடித்தனர்.

1998 இல் 'நேட்டோ' படையினரால் கைது செய்யப்பட்டு சர்வதேச நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்பட்ட கோர்ஸ்டிக், கண்ணி வெடியொன்றில் சிக்கி ஒருகாலை இழந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# மேற்காசியச் சிக்கல் தீர்வதற்கு சர்வதேச மத்தியஸ்தம் அவசியம்

## பலஸ்தீனத் தலைவர் அரபாத் கருத்து

ரோம்,ஒக.5



மேற்காசிய நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேச மத்தியஸ்தமும், கண்காணிப்பும் அவசியமென்று பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் தெரிவித்துள்ளார்.

இத்தாலியில் செய்தியாளர்களிடம் அரபாத் பேசியபோது இதனைத் தெரிவித்தார்.

யூதக் குடியேற்ற வாசிகள், பலஸ்தீனத் தலைவர்களைக் கொலை செய்யத் திட்டமிடுவதாகவும் அரபாத் அப்போது குற்றஞ்சாட்டியுள்ளார்.

பலஸ்தீனத் தலைவர்களைக் கொலை செய்யும் இரகசியத் திட்டத்துக்கு இஸ்ரேலிய அமைச்சரவை அங்கீகாரம் அளித்திருப்பது தெரிய வந்துள்ளதாகவும் அரபாத் கூறினார்.

இத்தாலிக்கு விஜயம் மேற்கொண்ட அரபாத் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரையும் சந்தித்தார். (ஒ-7)

# மக்களின் எதிர்ப்பையும் மீறி அமெரிக்கா போர் ஒத்திகை

விகியு,ஒக.5

போர்ட்டோரிகோவில் சர்வஜன வாக்கெடுப்பு முடிவையும், மக்களின் எதிர்ப்பையும் புறக்கணித்துவிட்டு விகியு தீவில் தனது கடற்படையின் போர் ஒத்திகையை அமெரிக்கா தொடர்ந்து நடத்தி வருகிறது.

அமெரிக்கா விகியு தீவில் அமெரிக்கா கடற்படை ஒத்திகையை நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து விகியுவாசிகள், கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த சர்வஜன வாக்கெடுப்பில் பெருமளவில் வாக்களித்திருந்தனர்.

இதனையடுத்து, அமெரிக்கா தனது போர் ஒத்திகையை கைவிட வேண்டும் என்று விகியு தீவின் அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள் வலியுறுத்தி வந்தனர்.

ஆனால் இவற்றைப் புறக்கணித்த அமெரிக்கா திட்டமிட்டபடி தனது போர் ஒத்திகையை மேற்கொண்டு வருகிறது.

இந்த ஒத்திகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து விகியு மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அமெரிக்க அரசு சர்வாதிகாரப் போக்குடன் நடந்து கொள்வதாகக் கண்டித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒத்திகையில் ஈடுபடும் அமெரிக்க போர்க் கப்பல்களின் குண்டுவீச்சு எல்லைக்குள் சென்று ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறார்கள்.

அவர்கள் குண்டு வீச்சுகளில் சிக்கிக் கொள்ளும் அபாயம் இருப்பதால், அப்பகுதியில் பதற்றம் நிலவுகிறது. (ஒ)

# புகைத்தலுக்கு எதிராக கனடாவில் புதிய சட்டங்கள்

ஒட்டாவா,ஒக.5

கனடாவில் பலத்த விமர்சனங்களுக்கு மத்தியில் புகைத்தலுக்கு எதிரான புதிய சட்டங்கள் கடந்த புதன்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்பட்டன.

புதிய சட்டங்களின் படி, மதுச்சாலைகள், சிற்றுண்டிச்சாலைகள், விளையாட்டகங்கள் போன்ற பொது மக்கள் கூடும் இடங்களில் புகைப்பிடிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த இடங்களில் புகைப்பதற்குரிய தனி இடங்களை அமைக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

புதிய சட்டங்களை மீறுவோர்க்கு 250 கனடிய டொலர்கள் முதல் 5 ஆயிரம் கனடிய டொலர்கள் வரை அபராதமாக விதிக்கப்படும் என்று ஒட்டாவா நகர பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஒ)

# ஜெயலலிதாவுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மனு

சென்னை,ஒக.5

ஜெயலலிதா தமிழக முதல்வராக பதவி வகிக்கத் தடை செய்யுமாறு கோரும் மனு ஒன்று நேற்று முன்தினம் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

பி.ஆர்.சபு என்பவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ள அரசு ஊழியர்கள், மேன்முறையீட்டு நீதிமன்றம் அவர்களை குற்றமற்றவர்கள் என விடுவித்தால் மட்டுமே பதவியை வகிக்க முடியும் என்று கடந்த வியாழக்கிழமை உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு ஜெயலலிதாவை பொறுத்தவரை பொருத்தமானது என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரு ஊழல் வழக்குகளில் ஜெயலலிதா தண்டனை அடைந்துள்ளதாகவும் -

ஜெயலலிதாவுக்குத் தண்டனை வழங்கப்பட்ட தீர்ப்புகளை மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்னமும் ரத்துச் செய்யவில்லை என்றும் - மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ-7)

## லிபியா, ஈரான் மீதான பொருளாதார தடை நீடிப்பு

வாஷிங்ரன்,ஒக.5

ஈரான் மற்றும் லிபியா மீதான பொருளாதாரத் தடையை மேலும் 5 வருடங்களுக்கு அமெரிக்கா நீடித்தது. இதற்கான உத்தரவுப் பத்திரத்தில் நேற்று முன்தினம் அதிபர் புஷ் கையெழுத்திட்டார்.

வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் பெற்றோலிய வர்த்தகம் ஆகியவற்றை முடக்கும் இந்தப் பொருளாதாரத் தடையை நீடிக்கும் அங்கீகாரத்தை அமெரிக்க செனட் கடந்த வாரம் வழங்கியிருந்தது. (ஒ)

# ஐ.நாவில் அதிபர் புஷ் உரையாற்ற முன் அமெரிக்கா கடனைச் செலுத்தவேண்டும்

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஐ.நா.மன்றத்தில் அதிபர் புஷ் உரையாற்றும் முன்னர், ஐ.நாவுக்கு அமெரிக்கா செலுத்தவேண்டியுள்ள தொகையை செலுத்தி விடவேண்டும் என்று ஐ.நா.பொதுச்செயலர் கோபி அனான் கோரியுள்ளார்.



ஐ.நாவுக்கு அமெரிக்கா செலுத்த வேண்டிய தொகை 170 கோடி டொலர்களை எட்டியுள்ளதாகக் கூறப்படும் நிலையில், சி.என்.என். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கோபி அனான் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

ஐ.நாவுக்கான கடனைச் செலுத்தாவிட்டால் உலகசபையில் அமெரிக்காவின் செல்வாக்கு பலவீனமடையும் என்றும் -

கடனைச் செலுத்தாவிட்டால் ஐநா.அங்கத்துவ நாடுகள் அது குறித்து எழுப்பும் கேள்விகளுக்கு அமெரிக்கா முகம் கொடுக்கவேண்டிவரும் என்றும் -

உலக விவகாரங்களில் முக்கிய பங்காற்ற நினைக்கும் அமெரிக்கா ஐ.நாவுக்கு கடனைச் செலுத்தாமலிருப்பது நல்லதல்ல என்றும் -

கோபி அனான் மேலும் தெரிவித்தார்.

ஐ.நாவுக்கான பழைய கடனை செலுத்துவதை அமெரிக்க செனட் சபை அங்கீகரித்துள்ள போதும், ஐ.நா.மனித உரிமைகள் ஆணையத்தில் அங்கத்துவம் பெறமுடியாமல் போனதையடுத்து ஐ.நாவுக்கு செலுத்த வேண்டிய தொகையில் 24 கோடி 40 இலட்சம் டொலரை சபை நிறுத்தி வைத்துள்ளது. (ஒ)

# கமலஹாசன் மருத்துவமனையில்

சென்னை,ஒக.5



நடிகர் கமலஹாசன் சிறுநீரகத்தில் கல் அடைபபுக் காரணமாக சென்னை போரூர் இராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

'ஆளவந்தான்' திரைப்படத்தின் படப்பிடிப்பு மற்றும் ஒலிப்பதிவுகளில் இரவு பகலாக பங்கேற்று வந்தார்.

கடந்த ஒருவாரகாலமாக கடும் வயிற்றுவலியால் அவர் பாதிக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து மருத்துவமனையில் கமலஹாசன் அனுமதிக்கப்பட்டார். (ஒ)

# இந்தியர்கள் பரதக் கலையைக் கற்க இங்குவரும் நிலை தோன்ற வேண்டும்

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஓக. 5

இந்திய மாணவர்கள் பரதக்கலையைக் கற்பதற்கு யாழ். பல்கலைக்கழகத்திற்கு ஓடோடி வரவேண்டும். அந்த அளவுக்கு பல்கலைக்கழகத்தினூடாக இந்தக் கலையை மேலும் வளர்க்க வேண்டும்.

மேற்கண்டவாறு தெரிவித்தார் யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் க. சிவராமலிங்கப்பிள்ளை —

நேற்று முன்தினம் நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெற்ற பேராசிரியர் வி. சிவசாமி எழுதிய 'பரதக்கலை' என்ற நூல் அறிமுக விழாவில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பேராசிரியர் எழுதிய இந்த நூலானது நுட்பங்கள் நிறைந்த தனித்துவமான ஒரு நூல் ஆகும். இந்த நூல் பற்றி நயப்புரை ஆற்ற என்னை அழைத்திருக்கிறார்கள். இதற்கு நான் தகுதியுடையவனா என்பது நீங்கள் தீர்மானிக்க வேண்டிய விடயம். நயப்புரை என்னும் போது அந்தத் துறையில் பெயர் போனவர்கள் செய்ய வேண்டியது. ஆயினும் நான் இந்த நூலை வாசித்துப் பார்த்தேன். நிறைய விடயங்கள் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளன. இது பரதக்கலையைக் கற்கின்ற மாணவர்களுக்கு மிகவும் வரப்பிரசாதமான ஒரு நூல்—என்று தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் தனதுரையில் —

நூலொன்று புதிதாக அறிமுகமாகும் போது அது சமுதாயத்திற்கு எவ்வாறான பணியைச் செய்ய முடியும் என்பதே பிரதானமான விடயமாகும். புதிய பரிணாமத்தில் புதுமெருகு கொடுத்து உருவாக்கியுள்ளார் நூலாசிரியர். காலத்தின் தேவை கருதி வெளியிடப்பட்ட நூல் இதுவாகும்— என்று தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தனதுரையில்—

பரதக்கலையானது தெய்வீகம் பொருந்தியது. இக்கலையைக் கற்றவர்கள் உள்ளும், புறமும் தெய்வீகத்தைப் பேண வேண்டும்—என்றார்.

மகாவித்துவான் பிரம்ம ஸ்ரீ ந. வீரமணி ஐயர் தனதுரையில்—

யாழ். பல்கலைக்கழகத்தில் பரதம், சமஸ்கிருதம் என்பன பற்றி நன்றாக ஆராய்ச்சி செய்து மாணவர்களை நல்ல கலைஞர்களாக ஆக்கும் வகையில் இந்நூலைத் திறம்பட ஆக்கியுள்ளார்—பேராசிரியர் சிவசாமி. பரதக் கலையின் சாராம்சத்தை ஆழமாக— நன்கு மனதில் பதியக் கூடிய வகையில்— நவும் எளிய சொற்களைப் பயன்படுத்தி ஆக்கித்தந்துள்ளார்.

பக்தி, பண்பு, பண்பாடு ஆகியவற்றை கலையுடன் இணைத்துக் கொடுத்துள்ளார். பரதக் கலைக்கு அரும் பெருந் தொண்டாற்றிய நிபுணர்களைப் பற்றியும், சுவாமி விபுலானந்தர் போன்ற பெரியவர்களைப் பற்றியும் இந்த நூலில் குறிப்பிட்டுள்ளார்— என்று தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக நடனத்துறைத் தலைவர் சபா. ஜெயராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் போரசிரியர் இரா. சிவச்சந்திரன், ஆசிரியர் இரா. செல்வவடிவேல் ஆகியோரும் உரையாற்றினர்.

(ஐ-10-9)

## 'தமிழ்த் தூது' கட்டுரை தொகுப்பு மீளாய்வு

தமிழாராய்ச்சி மாநாட்டின் தந்தை தவத்திரு தனிநாயகம் அடிகள் எழுதிய 'தமிழ்த்தூது' கட்டுரைத் தொகுப்பு நூல் மீள் பதிப்புச் செய்யப்படவுள்ளது.

நெடுந்திவு கலாசார சபையின் வேண்டுதலின் பேரில் தனிநாயகம் அடிகள் தமிழ் மன்றத்தின் செயலாளரும், நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவருமான புலவர் ஏ. டபிள்யூ, அரியநாயகம் இதற்கான ஏற்பாடுகளைச்செய்து வருகின்றார். (ஐ-7)

# புதிய எக்ஸ்-றே இயந்திரம் யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்தது

யாழ். போதனா வைத்திய சாலை எக்ஸ்—றே பிரிவுக்கு மேலும் ஒரு புதிய எக்ஸ்—றே இயந்திரம் சுகாதார அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கனேடியத் தயாரிப்பான இந்த இயந்திரம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் நோயாளர் சேவைக் கப்பல் மூலம் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளது.

கடந்த சில காலமாக ஒரேயொரு எக்ஸ்—றே இயந்திரத்துடன் மாத்திரம் இயங்கி வந்த இப் பிரிவுக்குத் தற்போது மேலும் ஒரு இயந்திரம் கிடைத்துள்ளது.

கடந்த காலங்களில் நான்கிற்கும் மேற்பட்ட எக்ஸ்—றே இயந்திரங்களுடன் இயங்கி வந்த இப்பிரிவு பின்னர் படிப்படியாகச் செயலிழந்து கடந்த சில வருடங்களாக ஒரே ஒரு இயந்திரத்துடன் மாத்திரம் இயங்கி வந்தது.

(ஐ-15)

## கட்டுநாயக்கா தாக்குதலின் எதிரொலி

# பிரான்ஸ் படப்பிடிப்புக் குழுவின் கொழும்பு விஜயம் ரத்து!

கொழும்பு, ஓக. 5

கண்டியில் நடைபெறும் பெரஹரவை மூன்று மணி நேர தொலைக்காட்சி விவரணப்படமாகத் தயாரிப்பதற்கு கொழும்புக்கு வருகை தர இருந்த பிரான்ஸ் நாட்டு அரச தொலைக்காட்சிப் படப்பிடிப்புக் குழு அதன் விஜயத்தை ரத்துச் செய்திருக்கிறது.

கடந்த 25 ஆம் திகதி கொழும்புக்கு வரவிருந்த இக் குழுவினர் கட்டுநாயக்கா விமானத் தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்தே தமது விஜயத்தை ரத்துச் செய்ததாகக் கூறப்படுகிறது.

(ஐ)

# மடகஸ்கார் நாட்டுடன் இலங்கை ராஜீக உறவு

கொழும்பு, ஓக. 5

மடகஸ்கார்நாட்டுடன் ஸ்ரீ லங்கா அரசு இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள உள்ளது.

கடந்த ஜூலை 27 ஆம் திகதி முதல் இதற்கான உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும், மடகஸ்கார் வெளிவிவகார அமைச்சர் இரட்சியண்டரிகமதாவும் இது தொடர்பான உடன்படிக்கையில் ஒப்பமிட்டுள்ளனர். (ஐ)

# முக்கிய மருந்து வகைகளுக்கு யாழ். ஆஸ்பத்திரியில் தட்டுப்பாடு

யாழ். போதனா வைத்திய சாலையில் மீண்டும் முக்கியமான மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் கிளினிக்குகளுக்கு வரும் நோயாளர்கள் மருந்துகளை தனியார் பார்மஸிகளில் வாங்கி பாவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வசதி குறைந்த நிலையில் வாழும் பெரும்பாலான நோயாளர்கள், மருந்து வாங்கிக் கொள்ள முடியாத நிலையில் நோயின் தாக்கத்தால் பல இன்னல்களையும், உயிராபத்துக்களையும் சந்திக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டு மக்களை அதிக அளவில் பாதித்துள்ள நீரிழிவு நோய்க்கான, இன்சுலின், டயனில், மெற்போமின் போன்ற மருந்துக்களுக்கும், மூட்டு வாத நோய்க்கான அதிமுக்கியமான 'மயோகிறிசுன் ஊசி மருந்து, இன்டோசிட்போன்ற மருந்து வகைகளுக்கும் மற்றும்பலரக முக்கிய மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-15)

## இணைந்து இயங்கும்

யாழ்ப்பாணம், ஓக. 5

யாழ். திருக்குடும்ப கன்னியர் சபையால் நிர்வகிக்கப்படும் யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் ஆங்கிலப் பாடசாலையையும், யாழ். திருக்குடும்பக் கன்னியர் மட மகாவித்தியாலயத்தையும் ஒன்றிணைத்து ஒரே பாடசாலையாக செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை யாழ். திருக்குடும்பக் கன்னியர் சபை மேற்கொண்டு வருகின்றது.

(ஐ-9)


# நெஞ்சை விட்டகலா நினைவலைகள்

8 ஆம் ஆண்டு

முதலாம் ஆண்டு சிராத்ததினம்





திருமதி
**சரஸ்வதி அட்ஷயலிங்கம்**

அமரர்
**வைரமுத்து அட்ஷயலிங்கம்**
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

| | | |
|---|---|---|
| 18 — 05 — 1933 | ← மலர்வு → | 09 — 05 — 1932 |
| 23 — 04 — 1993 | ← உதிர்வு → | 17 — 07 — 2000 |

திதி: 05-08-2001
(அமரபக்கத்து பிரதமை)

தாயில் சிறந்த ஒரு கோயிலும் இல்லை; தந்தை சொல்மிக்க மந்திரமும் இல்லை!
ஏன், தாரணியிலுமில்லை என்பதனை உங்கள் செயலால் நாமறிந்தோம்;
கைம்மா றேதும் கருதாமல் கருமம் புரியும் களஞ்சியம் நீர்;
கடல் சூழ் உலகில் கண்கண்ட தெய்வம் நீங்கள் இருவீரும்;
உயிரினோடும் உணர்வினோடும் உடலினோடும் உறவாடும்
உத்தமராக விளங்கி எமை உயரவைத்தீர் உலகத்தில்;
எமை நீர் விட்டே ஏகிடினும் உங்கள் உருவம் மனத்திருக்கும்;
இறைவன் அடியில் உம் ஆத்மா இன்பம் பெறநாம் இறைஞ்சுகிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதர, சகோதரிகள், மைத்துனர்.**

''அட்ஷயபவன்'', தும்பளை வீதி,
பருத்தித்துறை.

(சி/17710)



# மரண அறிவித்தல்

## திருமதி சுப்பிரமணியம் தர்மலட்சுமி

வேலணையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும், கொண்டவரும் தற்போது ஸ்கந்தபுரத்தில் வசித்து வந்தவருமாகிய திருமதி சுப்பிரமணியம் தர்மலட்சுமி 01—08—2001 அன்று ஸ்கந்தபுரத்தில் காலமானார்,

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு – செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், கொக்குவில் மேற்கு கந்தையா சுப்பிரமணியம் (மணியம்-ஓய்வுபெற்றயாழ். மாநகரசபை ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும், சுபாஜினி, சுகந்தினி (முதலாம் வருடம் யாழ். பல்கலைக்கழகம்), சுதர்சன், சுஜீபன், சுதாகரன், சுபாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(5-8-2001) ஞாயிற்றுக்கிழமை ஸ்கந்தபுரத்தில் நடைபெறும் அதே வேளை இன்று ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் மேற்கிலுள்ள மைத்துனி வீட்டில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உறவினர்கள்.

கொக்குவில் மேற்கு,
கேணியடி,

(90834)

உதயன்

## மின்சாரமும் தொலைபேசியும்

வடக்கின் மிக முக்கிய அத்தியாவசிய சேவைகளில் இரண்டு இன்னும் நிறைவு செய்யப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றன.

ஒன்று மின்சார விநியோகம், மற்றையது தொலைபேசி வசதி.

இரண்டு சேவைகள் குறித்தும் தினசரி உதயனுக்கு குறைந்தது இரண்டு முறைப்பாட்டுக் கடிதமாவது கிடைக்காமல் இல்லை. பலரும் பல விதமாகக் குறை சொன்னாலும் இந்த இரு சேவைகளுக்கும் வடக்கில் பொறுப்பான அதிகாரிகள் தங்களால் இயன்றவரை முயற்சிக்காமல் இல்லை என்று கூறமுடியாது. பல்வேறு வகைகளிலும் அவர்களது கைகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதுதான் உண்மை.

ஜீ.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைக் காலத்தில் மாணவர்களுக்கு மின்சார வசதியை வழங்குவதற்கு வாய்ப்பளிக்கும் விதத்தில் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு இலங்கை மின்சார சபையின் யாழ். அலுவலகம் பொது மக்களிடம் கேட்டுள்ளது.

இப்போதைய நெருக்கடி நிலையில நமது மாணவர்களின் நலன்கருதி, இந்த ஒத்துழைப்பை நாங்கள் வழங்கித்தானாக வேண்டும்.

இருட்டியது முதல் இரவு 10.30 மணிவரை வலுக்கூடிய மின் உபகரணங்களைப் பாவிக்காமல் தவிர்ப்பதன் மூலமும், மின் விளக்குகளைக் குறைந்தளவு பயன்படுத்துவதன் மூலமும் நமது மாணவர்களின் கல்வ வசதிக்கு ஒளி கிடைக்க நாம் ஒத்துழைத்து உதவ முன் வரவேண்டும். ஏனையோரையும் அயலவரையும்கூட நாம் கண்காணித்து, ஆலோசனை வழங்கி, தூண்டி இந்த நடைமுறைகளைப் பின்பற்றச் செய்ய வைப்பதும் நமது பொறுப்பு.


குடாநாட்டுக்குத் தேவையான தற்போதைய மின்சார வலு 18 மெகா வோட்ஸ். ஆனால் காங்கேசனில் உள்ள மின் உற்பத்தி நிலையத்திலிருந்து நமக்கு விநியோகத்துக்குக் கிடைப்பதோ ஆக 10 மெகா வோட்ஸ்தான். அதிலும் அவ்வப்போது நெருக்கடி. அதனால் அடிக்கடி மின்வெட்டை நடைமுறைப் படுத்தி, பொதுமக்களின் திட்டுக்களை வாங்கிக் குவிக்கின்றது இலங்கை மின்சாரசபை.

காங்கேசனிலும், சுன்னாகத்திலும் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் குடாநாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலையை விரைவில் எட்டும் என்ற ஆர்ப்பாட்டத்துடன்தான் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இன்று "சாண் ஏற முழம் சறுக்குவது" போன்று விநியோகம் விரிவுபடுத்தப்பட வழங்கலோ சுருங்கிச் செல்லும் நிலைமை; குடாநாட்டுக்கான மின்விநியோகத்தை சீர்செய்வது குறித்து சிந்திப்போர் யாருமில்லை என்ற நிலைமை. மின்சாரத்துறை அமைச்சர் 'ஷொக்' அடிக்கும் குண்டு வீச்சுகளைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

இது போலத்தான் குடாநாட்டின் தொலைபேசிச் சேவையும். குறிப்பிடத்தக்களவுக்குக் குடாநாட்டுக்குள வாடிக்கையாளர்களுக்குத் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுவிட்டன. ஆனால் குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்குமான இணைப்புக்கள் அதிகரிக்கப்படவில்லை. இதனால் தொலைபேசிகள் 'தொல்லை' பேசிகளாகிவிட்டன.

'கைக்கெட்டியும் வாய்க்கு எட்டாதது போல்' தொலைபேசி இணைப்புகளை விரிவுபடுத்துவதற்கான உயர்ந்த தொலைத் தொடர்புக் கோபுரம் நமது அதிகாரிகளின் விடா முயற்சியால் அமைக்கப்பட்டு பல மாதங்களாகிவிட்டன; ஆனால் இணைப்பை விஸ்தரிப்பதற்கான கருவிகள் வந்தபாடாக இல்லை. அவற்றில் கவனம் செலுத்துவதை விடுத்து, தினசரி பத்திரிகையில் படத்துடன் விளம்பரப்படுத்தக் கூடிய நிதிஉதவித் திட்டங்கள் குறித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் அரசியல்வாதிகள்.

யாழ்.மக்களின் கதி அதோகதிதான்!



குடாநாட்டின் பல பகுதிகளிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் திருடப்பட்டதாகக் கூறப்படும் 18 சைக்கிள்கள் யாழ்.பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

பொலீஸாரால் மீட்கப்பட்ட இவற்றில் பல சைக்கிள்கள் உரிமையாளர்களால் உரிமை கோரப்படாத நிலையில் உள்ளதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்.பொலீஸ் நிலையத்தில் தேடுவாரற்றுக் குவிந்து கிடக்கும் சைக்கிள்களைப் படத்தில் காணலாம். *(படம்:-றோய் மதிவதனன்)*

## நாட்டு நடப்பு

### நல்லையில் - VI

நாளுமே வந்தோம் கந்தா
நாமுன்னைப் பணியவில்லை
பாழும் ஐஸ்கிறீம் குடித்து
பலமுறை பேதி யாச்சு
தோளிலே கையைப் போட்டு
சுற்றினோம் புகையை விட்டு
காதலை வாழவைத்த கந்தனே!
குளிர்களியே போற்றி!

*- விகடகவி.*

## பற்றைப் பாம்பும் முற்றத்துப் பாம்பும்!

மணிமண்டபம்

இனப்பிரச்சினைக்குத் தெளிவான - திட்டவட்டமான தீர்வொன்றை முன்வைக்காமல் ஒருவித "நழுவல்" போக்கைக் கடைப்பிடிக்கின்ற -

ஒற்றையாட்சி அமைப்பை மாற்றுவதற்குத் தயங்குகின்ற -

தமிழ் மக்களுக்கு எதிரான வன்செயல்களைக் கட்டவிழ்த்துவிட்ட -

யாழ்நூலக எரிப்பு, மயிலந்தனைப் படுகொலைகள் போன்ற பல பயங்கரச் சம்பவங்களுக்குப் பின்னணியில் நின்று செயற்பட்ட -

ஐக்கிய தேசியக் கட்சியைத் தமிழ் பேசும் மக்கள் ஆதரிக்கலாமா?

அதேவேளையில் -

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற -

அதிகாரப் பரவலாக்கத்தைச் சாத்தியமாக்கும் வகையில் - ஒற்றையாட்சி முறையை ஒழித்து - ஒருவித கூட்டமைப்பை உருவாக்க முயல்கின்ற -

தமிழ் பேசும் மக்களுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதையும் அவை விரைவில் தீர்க்கப்படல் வேண்டும் என்பதையும் எவ்வேளையிலும் கூறிவருகின்ற -

தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் தாராளமாகப் பண உதவி செய்துவருகின்ற -

பொதுஜன ஐக்கிய முன்னணியையும் அதன் தலைவியாகிய சந்திரிகாவையும் தமிழ் பேசும் மக்கள் எதிர்க்கலாமா?

சாதாரண மக்கள் மட்டுமல்லாமல், தமிழ் பேசும் மக்களின் எதிர்காலத்தில் உண்மையான - விசுவாசமான - அக்கறை கொண்டுள்ளோரும் இத்தகைய கேள்விகளை எழுப்பி வருகின்றார்கள் -

தமிழ் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி - அவர்களிடையே பலவீனத்தையும் அவநம்பிக்கையையும், எதிர்காலம் பற்றிய ஒருவித பயத்தையும் ஏற்படுத்துவதற்காகவும் சிலர் இந்தக் கேள்விகளை முன்வைக்கின்றார்கள் -

எந்த நோக்கத்துக்காக முன்வைக்கப்பட்டாலும் -

தமிழ் பேசும் மக்கள் 'ஆற அமர' இருந்து சிந்திக்க வேண்டிய கேள்விகள் இவை!

ஆழமாக அலசப்பட்டு -

சரியாகவும் விரிவாகவும் பதில் காணப்பட வேண்டிய கேள்விகள் இவை!

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை -

ஐக்கிய தேசியக் கட்சி, புல்லுக்குள் மறைந்திருக்கும் விஷப்பாம்பாகவும் -

இப்போதைய பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதான பங்காளியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முற்றத்தில் - ஒளிவு மறைவின்றி நிற்கும் விஷப்பாம்பாகவும் -

முன்னர் சித்திரிக்கப்பட்டன!

இப்போது -

ஐ.தே.கட்சி முற்றத்தில் நிற்கின்றது. சுதந்திரக் கட்சி புல்லுக்குள் மறைந்திருக்கின்றது!

வித்தியாசம் அவ்வளவுதான்!

தமிழர்க்குரிய உரிமைகளை மறுப்பதில் - பறிப்பதில் - இரண்டுமே போட்டி போட்டுக்கொண்டு செயற்படுகின்றன!

ஜனநாயகப் பாரம்பரியங்களுக்கு முரணான சமீபத்திய 'அதிரடி' நடவடிக்கைகள் எல்லாம் -

"எப்படியாவது" தமிழ் மக்களின் உரிமைகள் எல்லாவற்றையும் உறுதிப்படுத்துவதற்காகவே எனச் சொல்வதும் -

தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டாலும் புதிய அரசியல் யாப்பை வரைந்து தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கப் போவதாகச் சொல்வதும் -

"சமாதானப் பிரியை"யாகவும் - சிறுபான்மை இனத்தினரின் 'நம்பிக்கை நட்சத்திரம்' ஆகவும் தன்னைக் 'காட்டிக்' கொள்ளும் சந்திரிகாவின் தந்திரமே தவிர வேறன்று!

தன்னுடைய 'அடிவருடிகள்' தொடர்ந்தும் தன் 'அடிவருடிகள்' ஆகவே இருப்பதை அந்த 'அடிவருடிகளே' நியாயப்படுத்துவதை இலகுவாக்குவதற்காகச் சந்திரிகா புனைந்துவரும் புதுவேடம் இது!

இலங்கையின் வடக்கும் கிழக்கும் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்கள் -

இவை பிரிக்கப்பட முடியாதவை -

இந்தப் பிரதேசங்களிலே பூரண சுயாதிபத்தியத்துடன் - யாரிடமும் மண்டியிடாமல் - யாருக்கும் அடி பணியாமல் தன்மானத்துடன் தலை நிமிர்ந்து வாழ்வதற்கே தமிழினம் விரும்புகின்றது!

ஆயுதம் ஏந்திப் போராடும் விடுதலைப் புலிகள் உட்பட தமிழ் மக்களிடையேயுள்ள பெரும்பான்மையான சிறுபான்மை இனக் கட்சிகள் எல்லாமே தமிழ் மக்களின் இந்த அபிலாஷைகளை அடிக்கடி பகிரங்கப்படுத்தி வருகின்றன!

சந்திரிகா வரையப்போகும் புதிய அரசியல் யாப்பில், தமிழ் மக்களின் இந்த அபிலாஷைகள் எந்த அளவுக்கு உறுதிப்படுத்தப்படும் - எவ்வாறு உறுதிப்படுத்தப்படும் என்பது இன்னமும் தெளிவாக்கப்படவில்லை!

நடைமுறைச் சாத்தியமான 'தீர்வு'க்காகப் பாடுபடப் போவதாகச் சொல்லிக்கொள்ளும் அரச ஆதரவாளர்கள் கூட, எது 'நடைமுறைச் சாத்தியமானது' என்பதை இன்றுவரை விளக்கவுமில்லை; விபரிக்கவுமில்லை!

'தானடித்த மூப்பா'கச் சந்திரிகா எதைக் கொடுக்க முன்வருகிறாரோ, அதையே 'நடைமுறைச் சாத்தியமான'தாக 'குடை, கொடி, ஆலவட்ட'த்துடன் அவர்கள் வரவேற்கக் கூடும்!

வடக்கு - கிழக்கில், தமிழ் பேசும் மக்கள் தொடர்ந்தும் வாழ்வதே, 'நடைமுறைச் சாத்தியம் அற்றது' என்ற நிலை கூடச் சில சமயம் உருவாக்கப்படக்கூடும்!

இந்தநிலையில் -

அரசியல் யாப்பு மாற்றத்தை ஆதரிக்கும்படி தமிழ் மக்களைக் கோரவேண்டும் என்று கேட்பது, ஐ.தே.கவின் 'நழுவல்' போக்கைவிட எந்த விதத்தில் மேலானது?

ஆகவே -

அபிப்பிராய வாக்கெடுப்பில், அரசுக்கு எதிராக வாக்களிப்பதற்குத் தமிழ் பேசும் மக்கள் முன்வந்தால் அதில் யாரும் எவ்வித தவறையும் காண முடியாது; 'கற்பி'க்கவும் முடியாது!

அதேவேளையில் -

அரசை எதிர்ப்பதென்பது ஐக்கிய தேசியக் கட்சியிடம் நிபந்தனையற்ற சரணாகதி அடைவது அல்ல என்பதையும் அனைவரும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்!

அராஜகப் பெரும்பான்மையையும் 'அடக்கு முறை'ப் போக்கையும் முழுமூச்சுடன் எதிர்ப்பதும் -

ஒரு தடவை 'இவர்களை' இழுத்து விழுத்திவிட்டு 'அவர்களை'த் தூக்கி நிறுத்துவதும் -

மறுதடவை 'அவர்களை' இழுத்து விழுத்திவிட்டு 'இவர்களை'த் தூக்கி நிறுத்துவதும் -

வெறும் அரசியற் பொழுதுபோக்கு அல்ல என்பதையும் -

தமிழ் பேசும் மக்களின் நீதி நியாயமான அத்தனை உரிமைகளையும் வென்றெடுப்பதற்கும் நிரந்தரமாக உறுதிப்படுத்துவதற்கும் -

'இவர்களை'யும் 'அவர்களை'யும் 'பக்குவப்படுத்துவதற்கான - நடைமுறைச் சாத்தியமான 'பயிற்சி' என்பதையும் -

தமிழ் பேசும் மக்களும் அவர்களின் அரசியற் தலைமைப் பீடங்களும் தம் சிந்தையில் என்றுமே நிலைநிறுத்திக்கொள்ளவேண்டும்.

*- சித்தன்.*

# அரச ஊழியர்களுக்கு 100 வீத சம்பள உயர்வு

## மருத்துவர் சங்கம் கோரிக்கை

அரச ஊழியர்களுக்கு 100 சதவீத சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்று அரச மருத்துவர் சங்கம் கோரியுள்ளது.

ஒரு டாக்டருக்குப் படிகள் உட்பட இன்று 17 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. இது 1994 இல் 372 டொலர்களுக்குச் சமனாகும். ஆனால் இன்று இது 172 டொலர்கள் மட்டுமே ஆகும். இதனால் அரச ஊழியர்களின் சம்பளத்தின் பெறுமதி 50 சதவீதத்தால் குறைந்துள்ளது. எனவே அரச ஊழியர்களுக்கு 100 சதவீத சம்பள உயர்வு அவசியமாகின்றது - என்று அரச மருத்துவர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

### நாளை

ஆடி 21
திங்கட்கிழமை
திதி: துதியை
பிற்பகல் 3.18 வரை.
நட்சத்திரம் : சதயம்
பின்னிரவு 3.39 வரை.
சுபநேரம் : 12.04 - 1.34
ராகுகாலம் : 7.34 - 9.04
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

செல்வம் நிறைந்தபோது பெருமையும், குறைந்தபோது சோர்வும் கொள்ளாதவனிடத்தில், செல்வம் அழிந்தாலும் சிறப்பு அழியாது.


கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



# விதை நெல் விநியோகம்

சண்டிலிப்பாய் ஓக.5

உடுவில் கமநல கேந்திர நிலையத்தில் இவ்வருட காலபோக நெல் விதைப்புக்கென விதை நெல்லைப் பெறுவதற்கு முற்பணம் செலுத்தி தமது பெயர்களை பதிவு செய்த விவசாயிகளுக்கு விதைநெல விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

ஒரு புசல் விதை நெல் 620 ரூபாவாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது. முற்பணம் செலுத்தியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும்-

மேலதிகமாக விதை நெல் தேவைப்படும் விவசாயிகள் தமது பிரிவு விவசாயிகள் சம்மேளனத்தின் ஊடாகப் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் -

பெரும்பாக உத்தியோகத்தர் விவசாய சம்மேளனங்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அறிவிதித்துள்ளார் (ஐ-135)


Baraka®

ஆரோக்கிய வாழ்வின் உற்ற நண்பன்

பராகா

கருஞ்சீரக எண்ணெய்
கருஞ்சீரக குளிசை



ஆயுள்வேத திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றது.

நாடு முழுவதிலும் உள்ள எல்லா பார்மசிகளிலும் கிடைக்கிறது.

நீங்கள் நீரிழிவு நோயால் அவதிப்படுபவரா?
அல்லது உடம்பில் அதிக கொலஸ்ரோல் இருப்பதால் கவலைப்படுகிறீர்களா?
கவலை வேண்டாம்....
பராகாவைப் பாவித்துப் பயனடையுங்கள்.

EXPOLANKA COMMODITIES (PVT) LTD.
*No.11A, Mile Post Avenue, Colombo - 3, SriLanka.*

Distributor in Jaffna,
SIVA NARUMANAB POONGA
No: 288, Hospital Road,
Jaffna. Tel: 021 - 2567

*Fax : 676546*
*E-Mail : expocom@sri.lanka.net*
*Web site : www.barakaoil.com*

(C/16865)


# ஓராண்டு நினைவலைகள்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 20 - 04 - 1929 | 05 - 08 - 2000 |

**அமரர் ஞானப்பிரகாசம் சூசைப்பிள்ளை**
(சிங்கம்)

ஆண்டொன்றானாலும் ஆறவில்லை எம்துயர்!
ஈண்டுமது பணி என்றென்றும் நிலைத்திருக்கும்!
உம் சேவை இப்புவியில் யார்தான் மறப்பினும்
நாம் நின் பணி என்றும் மறவோமே!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்.*

*செபஸ்ரியன் வீதி,*
*பாசையூர்.*

யுப்பிற்றலே குறூப்,
*பாசையூர்.*

(90828)

# உளங்கனிந்த நன்றியோடு பாராட்டி வாழ்த்துகின்றோம்

**சங்கானை புனித பிரான்சீஸ் சலேசியார் ஆலயம்**



மேற்படி ஆலய கட்டடத்திற்காக நிதி உதவி வழங்கிய வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ்மொழி விவகாரங்கள் அமுலாக்கல், இந்து கலாசார அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான மாண்புமிகு அமைச்சர் கௌரவ

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கு எமது உளங்கனிந்த நன்றிகளையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு



யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளருமான கௌரவ

**திரு.கே.வி.குகேந்திரன்**
**(ஜெகன்)**

அவர்களுக்கும்



சங்கானை நகர அபிவிருத்திக்கும், எமது ஆலயத்தின் கட்டடத் தேவையின் முக்கியத்துவத்தைக் கருதி கௌரவ அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக்கூறி அதற்கான முதற்கட்ட நிதியாக ரூபா ஐந்து லட்சத்தைப் பெற்றுக் கொள்ள உதவிய வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பி. இந்து சமய விவகாரப் பொறுப்பாளருமான

**திரு.ந.திரிலோகநாதன்**

அவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஓடக்கரை வீதி,*
*சங்கானை.*

- ஆலய பங்கு மக்கள்

(90832)

# நீர் விநியோகம் தொடர்பான பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஓக.5

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனமும் யாழ்.மாநகரசபையும் இணைந்து நடத்தும் 'நிலைத்து நிற்கக் கூடிய குடிதண்ணீர் விநியோகமும், குடிதண்ணீர் வீண் விரையத்தினைத் தடுத்தலும்' என்பது தொடர்பான பயிற்சிப் பட்டறை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயற்சிப் பட்டறையில் யாழ்ப்பாணம் பிரதேச செயலர், மாநகர சபை ஆணையாளர், ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவன அதிகாரிகள், கிராம அலுவலாக்ள், சமுர்த்தி முகாமையாளர்கள், மாநகர சபையின் நீர் வேலைப் பகுதியினர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அண்மைக்காலமாக மாநகர சபைப் பகுதியில் ஏற்பட்டு வருகின்ற குடிதண்ணீர் விநியோகம் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் நீர் விரயத்தினைத் தடுப்பதற்கான வழிமுறைகள் பற்றி இதில் ஆராயப்படவுள்ளது. (ஐ-10)

# ஆலோசனை கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக.5

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் பவளவிழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் ஆளுநர்சபை உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், டி.ஏ.எம்.பட்டதாரி சங்க உறுப்பினர்கள்,பழைய மாணவர்கள் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு ஆளுநர் சபையின் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அறிவித்துள்ளார். (ஐ-10)

# நல்லூரில் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.5

'நல்லூர் முருகனின் பிள்ளைத் தமிழ்' நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராசா தலைமையில் நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-10)

# வடமராட்சியில் ஆசிரியர் எழுச்சி மாநாடு

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்ட எழுச்சி மகாநாடு அடுத்த மாதம் வடமராட்சியில் நடைபெறவுள்ளது.

இதற்கான நடவடிக்கையினை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி கிளைகள் மேற்கொண்டு வருகின்றன.

இந்த எழுச்சி மகாநாட்டினை ஒட்டி ஆசிரியர்களது எழுச்சி ஊர்வலம் ஒன்றும் வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்திற்கு அண்மையில் ஆரம்பித்து பருத்தித்துறை சிவன்கோயில் வரையும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் மகாநாடு பருத்தித்துறை சிவன் கோயில் கல்யாண மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது. (ஐ-182)

# சுழற்சிமுறை க் கடன்

தென்மராட்சி,ஓக.5

துன்னாலை வடக்கு கொடிக்காடு இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாமில் தங்கியுள்ள குடும்பங்கள் சுய தொழில்களை மேற்கொள்வதற்கு வசதியாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தினால் சுழற்சி முறைக் கடன் வழங்கப்பட உள்ளது.

வீட்டுத்தோட்டம், தென்னோலை பின்னுதல், கால்நடை வளர்ப்பு, வியாபாரம் ஆகியவற்றை மேற்கொள்வதற்கு இக்கடன் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி தெரிவித்தார். (ஐ-117)

# ஆசிரியருக்கு பதவி உயர்வு

தென்மராட்சி,ஓக.5

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த 10 ஆசிரியர்களுக்கு ஆசிரிய சேவைதரம் ஒன்றுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் கடந்த 6.10.1994 தொடக்கம் இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)


**The Barbara Mulvaney Computer Training Center**
123, Temple Road, Jaffna

குறைந்த கட்டணத்துடன்
விடுமுறைக்கால கணனிப் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்ந்தும் ஐ.நா.வின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் பாபறா மல்வாணி கணனிப்பயிற்சி நிலையத்தில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கான குறுகிய காலக் கணனிப் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகின்றன. விசேட கட்டணச் சலுகையுடன் கூடிய இக் கற்கைநெறியில் இணைந்து உங்களின் விடுமுறை நாட்களைப் பயனுள்ளதாக்கிக் கொள்ளுங்கள்.

- *மிகக் குறைந்த கட்டணம்.*
- *வார, வாரஇறுதி நாட்களில் உங்களின் வசதிக்கேற்ப வகுப்புக்கள்.*
- *மட்டுப்படுத்தப்படாத செய்முறை வகுப்புக்கள்*
- *போதியளவு விளக்கத்துடன் கூடிய தரமான பாடத்திட்டம்.*

பயிற்சி நெறிகளின் ஆரம்பத் திகதி: 11-8-2001. (10.00 a.m.)

Note:
➢ பல்கலைக்கழக மாணவர்களின் **Dissertation** வேலைகள் மிகவும் தரமானமுறையில் செய்து கொடுக்கப்படும்.
➢ கட்டட வரைபடங்கள் யாவும் கணனி மூலம் சிறந்த முறையில் கீறிக் கொடுக்கப்படும்.

-நிர்வாகம்


# அஞ்சலி



சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம், பாளி ஆகிய மொழிகளிலே சிறப்புறத் தேர்ந்து பண்டிதனாகி சமஸ்கிருத மாணவருக்கு விரிவுரைகள் நிகழ்த்தி வந்தவரும் எமது சங்கத்தின் சமஸ்கிருத பாடப் பரீட்சகருமாகி இருந்தவருமான

**பண்டிதர் சி.குணரத்தினம் B.A. Lond.**

அவர்களின் இருபத்தொராம் நாள் நினைவாக நமது அஞ்சலி.

செயலாளர்,
ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்,
*223, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(90805)

# ஓராண்டு நினைவஞ்சலி



| மண்ணகம் | விண்ணகம் |
|---|---|
| 1926 - 07 - 26 | 2000 - 07 - 19 |

**திருமதி புஷ்பராசம் செல்லத்தம்பி**

திதி: 07.08.2001

**ஆண்டொன்று போயிடினும் உன் அன்பு முகந்தான் மறப்பமோ?**
**விண்ணுலகு ஏகிடினும் நெஞ்சில் உன் நினைவுதான் அகலுமோ?**
**பொன்பதித்த பூவுடலும் எங்கேயென்றேங்க வைத்து**
**புன்னகை கொள் திருவதனம் காண்போமா நாமெனத் தவிக்க**
**சென்றாயம்மா! நீ அன்பின் ஊற்றினிலே அரும்பிய தீபம்!**
**குன்றிலிட்ட விளக்கெனவே எம்மனதில் அணையாத் தீபம்!**

எமது குடும்ப விளக்காய் இருந்து மறைந்த திருமதி புஷ்பராசம் செல்லத்தம்பி அவர்களது முதலாம் ஆண்டுத் திவஷம் (சிராத்தம்) எதிர்வரும் 07.08.2001 செவ்வாய்க்கிழமை எமது தற்காலிக முகவரி இல்லத்தில் நடைபெறும். இதில பங்குபற்றி பின்னர் நிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

கணவர்,பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தற்காலிக முகவரி:
*ச.செல்லத்தம்பி*
*C/O க.சிவஞானசுந்தரம்,*
*அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.*

நிரந்தர முகவரி:
*"செல்வபதி"*
*மீனாட்சி அம்மன் கோயில் வீதி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.*

(90847)

# ஈழத் தமிழர்களின் 'பாதுகாவலன்'

## 125 ஆண்டுகள் நிறைவுப்பணி

**இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடான 'பாதுகாவலன்' பத்திரிகை அதன் 125 ஆவது ஆண்டு நிறைவை நேற்றுக் கொண்டாடியது. அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு என்ற பெயரோடும் பெருமையோடும் கடந்த 125 ஆண்டுகளாக இலங்கை வாழ் கத்தோலிக்க மக்கள் மத்தியில் பணியாற்றியுள்ளது பாதுகாவலன். இப் பத்திரிகையின் 125ஆவது ஆண்டு நிறைவு பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி 2001ஆம் ஆண்டாகும். அன்றைய தினம் யாழ்ப்பாண மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் இருந்தமையால் இவ் ஆண்டு நிறைவை நினைவுகூர முடியாமற் போய்விட்டது. 04.08.2001 அன்று பாதுகா[illegible] பத்திரிகையின் 125ஆவது ஆ[illegible] நிறைவினை யொட்டிய கொண்டாட்டங்களும் சிறப்பு மலர் வெளியீடும் நடைபெற்றது. இக் கட்டுரையில் பாதுகாவலன் பத்திரிகையின் சரித்திரப் பின்னணியையும் பரிணாம வளர்ச்சியையும் ஆராயவிருப்புகிறேன்.

மேலைத்தேய மிஷனறிமாரின் வருகையால் அச்சுத்துறையும் பத்திரிகையியலும் அறிமுகப்படுத்தப்பட்டது. வேதபோதக நோக்கம் கொண்ட இவர்கள் அச்சுத் துறையையும் பத்திரிகைப் பணியையும் முற்று முழுதாக அந்நோக்கத்திற்கு பயன்படுத்தினார்கள். சமயங்களுக் கெதிராகவும் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து பிரிந்துபோன சபைகளுக் கெதிராகவும் பத்திரிகைத் துறையினை நல்ல ஊடகமாக பயன்படுத்தினார்கள்.

சத்தியவேத பாதுகாவலன் உண்மையிலேயே சத்திய வேதத்தின் பாதுகாவலனாக கத்தோலிக்கத்துக்கு எதிராக எழுந்த தடைச் சுவர்கள் அனைத்தையும் தகர்த்தெறியும் நல்ல ஊடகமாக செயற்பட்டது.

மிஷனறிமாரின் வருகையோடு அறிமுகப்படுத்தப்பட்ட அச்சியந்திரத்தையும் பத்திரிகைத்துறையையும் கத்தோலிக்க விசுவாசத்தை வளர்க்கும் நல் ஊடகமாக யாழ். திருச்சபை பயன்படுத்திக்கொண்டது என்பதற்கு பாதுகாவலன் தக்க சான்றாகும்.

### பாதுகாவலனின் சரித்திரம்

1876ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19ஆம் நாள் சனிக்கிழமை கத்தோலிக்க பாதுகாவலன் என்ற பெயருடன் ஆங்கிலமும் தமிழும் கலந்த நிலையில் 4 பக்கங்களில் இப் பத்திரிகை உதயமானது. 31.07.2001 பாதுகாவலன் பத்திரிகையில் 125 ஆண்டுகளுக்கு முன்னர் வந்த முதலாவது பத்திரிகையின் 1ஆம், 2ஆம் இதழ்களைக் காணலாம். இலங்கை வாழ் கத்தோலிக்க மக்கள் அனைவருக்கும் பணியாற்ற என்று ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பத்திரிகை ஆரம்பத்தில் இரு வாரங்களுக்கு ஒருமுறை ஒன்றுவிட்ட ஒரு சனிக் கிழமைகளில் ஆங்கிலம் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வெளிவந்தது.

**அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை**

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காத்திருப்பவன் கண்விழிப்பது வீண் என்ற பாதுகாவலனின் விருதுவாக்கு இன்று புதிய மொழிபெயர்ப்பின்படி ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (திபா.127:1) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாவலன் பெற்றுக்கொண்ட வரவேற்பின் காரணமாக 1894இல் கதலிக் கார்டியன் (Catholic Guardian) என்ற ஆங்கில ஏடு தனியாகப் பிரிக்கப்பட்டது.

### பாதுகாவலனின் பெயர் மாற்றம்

ஆரம்பத்தில் கத்தோலிக்க பாதுகாவலன் என்று அழைக்கப்பட்ட இப் பத்திரிகை 1912இல் சத்தியவேத பாதுகாவலன் என்ற பெயர் மாற்றத்துடன் வார இதழாக மாற்றம் பெற்றது. 1976ஆம் ஆண்டு இப் பத்திரிகையின் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்பட்ட பின்னர் இப் பத்திரிகையின் பெயர் பாதுகாவலன் என்று மாற்றப்பட்டிருக்கிறது. இன்று இப் பத்திரிகை பாதுகாவலன் (Paathukavaln) என்ற பெயரிலே புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் எதிரீட்டுப் பதிவு அச்சுமுறையில் (Offset) அச்சிடப்பட்டு வெளிவந்து கொண்டிருக்கிறது.

### பாதுகாவலன் ஆசிரியர்கள்

ஆரம்பம் முதல் இன்றுவரை பாதுகாவலனின் ஆசிரிய பீடத்தில் அளப்பெரும் பணியாற்றியவர்கள் பலர். இவர்களுள் ஆரம்பகாலத்தில் இருந்தவர்கள் பொதுநிலையினராகவும் பிற்பட்ட காலங்களில் பணியாற்றிவர்கள் குருக்களாகவும் இருக்கின்றனர்.

தமிழ் இதழின் முதல் ஆசிரியராக இந்தியாவில் இருந்து வந்த அருளப்பு முதலியார் அரும் பணியாற்றினார்.

அவரைத் தொடர்ந்து 1924ஆம் ஆண்டிலிருந்து திரு. வி. பிரான்சிஸ் தம்பு என்பவரும் அவரைத் தொடர்ந்து 1960ஆம் ஆண்டுவரை திரு. அருளப்பிரகாசம் என்பவரும் பணியாற்றியுள்ளனர்.

1960 முதல் 1962ஆண்டு வரை அருள்தந்தை வ. தியோகுப்பிள்ளை பாதுகாவலன் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இவர் இளைப்பாறிய முன்னாள் யாழ்.ஆயர் என்பது குறிப்பிடத்தக்கது.

1962ஆம் ஆண்டு முதல் 1972ஆம் ஆண்டு வரை திருவாளர் எஸ். எம். ஜே. லூயிஸ் ஆசிரியப் பணியாற்றினார்.

இதன் பின்னர் பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியப் பணிக்கு யாழ்.ஆயர் குருக்களையே நியமித்து வருவது வழக்கமாக இருந்து வருகிறது.

1972ஆம் 1979ஆம் காலப் பகுதியில் அருள்தந்தை மேரி ஜோசப் ஆசிரியப் பணிபுரிந்தார்.

1979ஆம் 1986ஆம் காலப் பகுதியில் அருள்தந்தை அன்ரன் மத்தாயஸ் ஆசிரியராகப் பணியாற்றினார்.

1986ஆம் ஆண்டு முதல் 1992ஆம் ஆண்டு வரை 2000ஆம் ஆண்டில் இறைவனடி சேர்ந்த அருள்தந்தை இ.ஜே. அருமைநாயகம் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

1992ஆம் 1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

1995-1996 ஆண்டுகாலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பாரிய இடம்பெயர்வு காரணமாக பாதுகாவலன் பத்திரிகை வெளிவரவில்லை. திரும்பவும் யாழ்.நகருக்கு மக்கள் திரும்பி வந்தபோது 96-97ஆம் ஆண்டு குறுகிய காலப் பகுதியில் அன்ரன் மத்தாயஸ் அடிகளார் இரண்டாவது தடவையாக பாதுகாவலன் ஆசிரியராகப் பணியாற்றினார்.

1997ஆம் ஆண்டிலிருந்து இப் பணியினை ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் ஆற்றிவருகிறார்.

### பாதுகாவலன் தடைப்பட்டது

பாதுகாவலன் தவிர்க்கப்பட முடியாத இந்த 125 ஆண்டுகாலப் பணியில் சில தடவைகள் நிறுத்தப்பட்டது. வாரப் பத்திரிகை மாதப் பத்திரிகையாகவும் மாதமிரு பத்திரிகையாகவும் மாற்றம் பெற்றுள்ளது. 12.04.91 வரை வாரமொரு பத்திரிகையாக வெளிவந்த பாதுகாவலன் பின்னர் மாதமிரு பத்திரிகையாக மாற்றம் பெற்றுள்ளது.

1) 90களில் யாழ். நகரில் இடம்பெற்ற கோட்டை அடிபாடும் அதனோடு ஒட்டிய போர் இடம்பெயர்வு என்பவற்றின் காரணமாக 15.06.90 முதல் 15.02.91வரை பாதுகாவலன் பத்திரிகை நிறுத்தப்பட்டது.

2) 27.10.1995 முதல் 28.06.1996 வரை இடம்பெற்ற வரலாற்றில் முக்கிய இடம்பெறுகின்ற பாரிய இடம்பெயர்வு காலத்தில் பாதுகாவலன் நிறுத்தப்பட்டது.

3) 30.04.2000 முதல் 24.06.2000 வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற இடம்பெயர்வினால பாதுகாவலனின் இரு இதழ்கள் வெளிவரவர முடியாமற் தடைப்பட்டன.

4) இந்திய இராணுவ பிரச்சினையின் போது 16.10.87 முதல் 26.01.88 வரையிலான காலப்பகுதியில் பாதுகாவலனின் 13 இதழ்கள் வெளிவரவில்லை.

### கத்தோலிக்க அச்சகம்

பாதுகாவலன் பத்திரிகையின் வளர்ச்சியிலும் முதிர்ச்சியிலும் புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்துக்கு ஒரு பாரிய பொறுப்பு உண்டு.

இவ் அச்சகத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று பாதுகாவலன் பத்திரிகையை வெளியிடுவதாகும். அப் பணியினை அன்று அச்சுக்கோப்பு முறையில் பணிசெய்த ஆரம்பகாலத்திலும் இன்று கணினி முறையில் ரைப்செற் செய்யும் நவீனகாலம் வரை புனித வளன் கத்தோலிக்க அச்சகம் சிறப்பாக ஆற்றிக்கொண்டே வந்திருக்கின்றது.

ஆயர் மேதகு பொஞ்சின் ஆண்டகைக்கு (1868-1883) யாழ். மறை மாவட்டத்திலும் அச்சகம் ஒன்றினை நிறுவவேண்டும் என்ற ஓர் ஆசை மிக நீண்ட காலமாக இருந்து வந்தது. ஒரு தடவை அவர் தம் சொந்த நாடான பிரான்சு நாட்டுக்கு சென்றபோது தம்மிடம் இருந்த இந்த எண்ணக்கருவுக்கு உரு கொடுக்க வேண்டும் என்று விரும்பினார். அவருடைய நண்பரும் அந் நாட்டு மந்திரியுமாயிருந்த நண்பர் ஒருவர் மூலமாக அச்சியந்திரம் ஒன்றினை ஒருவகையில் இலவசமாகப் பெற்றுக்கொண்டார். டேலா வேர்சா என்ற ஒரு பெண் யாழ். நகரில் அச்சியந்திரத்தை நிறுவும் பணிகளுக்காக 4000 பிராங் கொடுத்து உதவிசெய்தார். மன நிறைவோடும் மன மகிழ்வோடும் பொஞ்சின் ஆண்டகை அவர்கள் இந்த சாதனங்களை கடல்மார்க்கமாகக் கொண்டுவந்து கொழும்புத்துறை அநாதைகள் இல்லத்தில் பத்திரப்படுத்தினார்.

கொழும்புத்துறை அநாதைகள் இல்லத்தில் உண்மையிலேயே ஆயர் கொண்டுவந்த அச்சியந்திரம் சிலகாலமாக கவனிப்பாரற்றுக் அநாதை நிலையிலேயே இருந்தது. கார்த்திகேசு அன்றூா என்கின்ற இளைஞன் அவ் இயந்திரத்தை மெது மெதுவாக இயக்கக் கற்றுக் கொண்டதன் பயனாக 1872ல் சிறிய துண்டுப் பிரசுரங்கள் அச்சடிக்கப்பட்டன. அதன பின்னர் ஆயர் பொஞ்சின் அவர்கள் அதிக ஊக்கமும் உறுதியும் கொண்டவராக கார்த்திகேசு அன்றூாவை இந்தியாவிற்கு அனுப்பி அச்சக்கலையையும் அதன் தொழில நுட்பங்களையும் முறையாக கற்று வர செய்தார்.

### இன்றைய புனித வளன் கத்தோலிக்க அச்சகம்

1873ல் கார்த்திக்கேசு அன்றூா இலங்கை திரும்பிய போது கொழும்புத்துறையிலிருந்த திருப்பாலத்துவ கத்தோலிக்க அச்சகம் அச்சு இயந்திரங்களோடு யாழ். ஆயர் இல்ல வளவில் ஆயர் இல்லத்துக்கு அண்மையில் இன்று புனித வளன் கத்தோலிக்க அச்சகம் இருக்கும் அதே இடத்தில் குளத்தருகில் இருந்த கொட்டிலில் ஆரம் பிக்கப்பட்டது.

### பொற்காலம்

1878ல் மேதகு பொஞ்சின் ஆண்டகை காலத்தில் ஒரு பெரிய மண்டபமாக இந்த அச்சகம் கட்டப்பட்டது. 1897ல் பிரதான வீதியருகே இன்று அமைந்துள்ள புனித வளன் கத்தோலிக்க அச்சகமும் புத்தகசாலையும் மேதகு யூலன் ஆண்டகை காலத்தில் கட்டப்பட்டன. அச்சுவார்த்தல் தங்கமுலாமிடல் போன்ற நுட்ப வேலைகளை மிகவும் சிறப்பாக செய்யத் தொடங்கிய இந்த அச்சகம வட இலங்கையின் தலைசிறந்த அச்சகம் என்ற பெயர் பெற்றுக் கொண்டது. 1897முதல் 1946 வரையிலுள்ள 50 வருட காலப்பகுதியில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் பேனையில் மையோடிய மட்டும் இந்த அச்சுக் கூடத்துக்கு உறக்கம் கிடைக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அச்சகமும் பத்திரிகையும் உன்னதமான ஒரு நிலையிலிருந்த காலம் இதுவாகும்.

புனித சூசை மாமுனிவர் கத்தோலிக்க அச்சியந்திரசாலை என்ற பெயரோடு ஆரம்பிக்கப்பட்டு புனித வளன் கத்தோலிக்க அச்சகமாக *(St. Joseph's Catholic Press)* இன்று விளங்கும் அச்சகத்தின் முதல் முகாமை யாளராக கார்த்திகேசு அன்றூா நியமிக்கப்பட்டார்.

பொஞ்சின் ஆண்டகை பணிபுரிந்த காலத்தில் யாழ். மறைமாவட்ட அதிகாரபூர்வ ஏடாக பாதுகாவலன் பத்திரிகை ஆரம் பிக்கப்பட்டாலும் அது இலங்கை வாழ் கத்தோலிக்க மக்கள் அனைவரினதும் வேத விசுவா சத்தின் காவலனாகவும் சொத்தாகவுமே கருதப்பட்டது.

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு என்ற பெருமையை தன்னுடையதாக்கிக் கொண்டுள்ள பாதுகாவலன் பத்திரிகை இன்றும் இலங்கை முழுவதிலுமுள்ள மறைமாவட்டங்களின் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தன் பணியை ஆற்றிக்கொண்டுதானிருக்கின்றது.

ஒரு பத்திரிகையை ஆரம்பித்து நடத்துவதென்பது ஒருபோதும் இலகுவான ஒரு பணியல்ல. இந்திய பத்திரிகைத் துறையில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த சி.பா. ஆதித்தனார் ஒரு பத்திரிகையை தொடக்கி நடத்துவதென்பது நெருப்பு ஆற்றை நீந்திக் கடப்பது போலவும், யானையைக் கட்டி தீனியைப் போடுவது போலவும் உள்ளது என்று தெரிவிக்கிறார்.

இலங்கைப் பத்திரிகை உலக சரித்திர ஏடுகளை புரட்டிப் பார்க்கின்றபோது புற்றீசல்கள் போல் தோன்றி மறையும் நிலையே பொதுவானதாகக் காணப்படுகின்றது. சில பத்திரிகைகள் இதற்கு விதிவிலக்காக இந்த நெருப்பு ஆற்றை நீந்திக் கடக்க அல்லும் பகலும் முயன்று கொண்டிருக்கிறார்கள்.

நிறுவன அமைப்பையும் சமயப் பின்னணியையும் கொண்ட பத்திரிகைகள் சிலவே இதில் பெருவெற்றி கண்டுள்ளன என்று கூறினால் தவறு இருக்க முடியாது.

இலங்கையில் கொழும்பு மறை மாவட்டத்தின் ஆங்கிலக் கத்தோலிக்க வார ஏடான மெசஞ்சர் 1869 இல் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை சிங்கள கத்தோலிக்க ஏடான ஞதணார்த்தய பிரதிபாய 120 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள நிலையிலுள்ளது. தமிழ் கத்தோலிக்க வார ஏடான பாதுகாவலன் 125 ஆண்டுகளைநிறைவு செய்துள்ளது. ❐



**வீட்டுக்கொரு பாதுகாவலன்**

**விசுவாசத்தின் பாதுகாவலன்**

---

# நெடுந்தீவுப் பகுதிக்கு மூலதன நன்கொடை நிதி

## 60 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஓக.5

நெடுந்தீவு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் சன சமூக நிலையங்கள், பொதுநூலகங்கள், மகப்பேற்று, பிள்ளைகள் பராமரிப்பு மற்றும் மலசல கூட பராமரிப்பு என்பவற்றுக்காக வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் மூலதன நன்கொடைநிதியாக 60 ஆயிரத்து 500 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் புலவர் ஏ.டபிள்யூ. அரியநாயகம் தெரிவித்தார்.

இந்த நிதியில் இருந்து நூலகங்களுக்கான நூல் கொள்வனவுக்கென 18 ஆயிரம் ரூபாவும், சனசமூக நிலையங்களுக்கான கொடுப்பனவுக்கென 7 ஆயிரத்து 500ரூபாவும், மகப்பேற்று - பிள்ளைகள் பராமரிப்புக்கென 25 ஆயிரம் ரூபாவும், மலசல கூட பராமரிப்புக்கென 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது என்றும் -


பிரதேச சபைத் தலைவர் மேலும் தெரிவித்தார். (ஐ-7)

---



**கொக்குவில் லயன்ஸ் கழகத்தின் 2001-2002 காலப்பகுதிக்கான புதிய நிர்வாகிகளின் பதவியேற்பு வைபவம் கடந்த ஜூலை 27ஆம் திகதி நடைபெற்றது. அந்த வைபவத்தில் கொக்குவில் லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவர் லயன் க.மு.பத்மநாதனுக்கு யாழ்.றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவர் றோட்டேரியன் அ.பஞ்சலிங்கம் விருது வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ)**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 29 - 11 - 1957 | 05 - 08 - 2000 |

அமரர்

## தம்பு சந்திரதாசன்

எழுந்து வருவாயென ஏக்கமுடன் பார்க்கின்றோம்
வாழ்வோம் உம்முடனென வாஞ்சையோடு வாழ்கின்றோம்
எழமாட்டாயா ஏதிலிகள் எம்முன் வரமாட்டாயா?
நிழலில்லையே ஐயா? நிம்மதியும் இல்லையே!

*லோட்டன் வீதி,*
*மானிப்பாய்.*

*பிரிவால் துயருறும்:*
தாய், மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

(90551)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 18 - 05 - 1978 | 05 - 08 - 1998 |

அமரர்

## விக்டர் நீல்பிறீடன்

(உரிமையாளர், விக்டறி சலூன், மானிப்பாய்.)

ஆண்டுகள் மூன்றானாலும் ஆறாது எம் துயரம்!
எம்மோடு சேர்ந்து ஒன்றாய் வாழ்ந்த இன்பக்குயிலே!
எம்மை விட்டு எங்கே பறந்தாய்?
ஆலயம் போன்ற வீட்டில் ஆறாத்துயரம் வந்ததேனோ?
தந்தையைப் போல் திகழ்ந்தாயே!
அன்னையை அன்பில் வென்றாயே!
சகோதர பாசத்தில் மிதந்தாயே!
அனைவரையும் உனதன்பால் கவர்ந்தாயே!
இன்று மௌனமானது ஏனையா?

*மெமோறியல் லேன்,*
*மானிப்பாய் வடக்கு,*
*மானிப்பாய்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(90712)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 - 04 - 1917 | 06 - 07 - 2001 |

திருமதி

## கந்தையா இளையபிள்ளை

இன்று (05-08-2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- மகன் குடும்பத்தினர்

தற்காலிக முகவரி
*வல்லிபுரப்பரியாரியார் ஒழுங்கை,*
*பருத்தித்துறை.*

நிரந்தர முகவரி
*மருதங்கேணி,*
*தாளையடி.*

(90626)

## சனசமூக நிலைய அபிவிருத்திக்கு நிதி

குருநகர்,ஓக.5

குருநகர் றெக்கிளமேசன் சனசமூகநிலைய புனரமைப்பு வேலைகளுக்காக வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு 75 ஆயிரம் ரூபாவுக்கான காசோலையை அதன் நிர்வாகத்திடம் வழங்கியுள்ளது.

முதற்கட்டக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாகவும், புனரமைப்பு வேலைகள் முடிவுற்றதும் சனசமூக நிலையம் கோரிய மிகுதிப்பணம் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஜ-51)

## 3 எம்.பிக்களுக்கு விளக்கம் கோரி கடிதம்

கொழும்பு,ஓக.5

அரசில் இருந்து வெளியேறி எதிர்க்கட்சி வரிசைக்குச் சென்றுள்ள தேசிய ஐக்கிய முன்னணியின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிச் செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜயரத்தின விளக்கம் கோரியுள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பட்டியலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவான தேசிய ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஸ்வி சின்னலெப்பை, அதாவுல்லா,சேகு தாவூத் ஆகியோருக்கே விளக்கம் கோரிக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

(க-3)

## கொக்குவிலில் கூரை வழியாக இறங்கித் திருட்டு

வலி.வடக்கு,ஓக.5

கொக்குவில் கிழக்கில் சபாபதி வீதியில் இராணுவ முகாமுக்கு கூமார் 75 யார் தூரத்தில் உள்ள வீட்டில் இருந்து இரவு நேரம் தொலைக் காட்சிப் பெட்டி, நீர் இறைக்கும் இயந்திரம் ஆகியன திருடப்பட்டுள்ளன.

கொக்குவில் பகுதியில் அண்மைக் காலத்தில் இடம்பெற்றுள்ள ஐந்தாவது திருட்டுச் சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நள்ளிரவு நேரம் ஓடுகளை அகற்றி வீட்டினுள் இறங்கி கதவுகளைத் திறந்த திருடர்கள் இப்பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இதுபற்றி யாழ்.பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(க-86)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

### மணமகள் தேவை

யாழ். இந்து குடும்பத்தைச் சேர்ந்த (வயது37) அமெரிக்காவில் நிரந்தர வதிவிடவசதி கொண்ட, (I.Tஇல் Ph.D) லக்கினத்தில் செவ்வாய் உள்ள மணமகனுக்கு 27-30 வயதுக்கு இடைப்பட்ட வயதுள்ள மணமகளை எதிர்பார்க்கின்றார்கள். ஜாதகம், புகைப்படம் என்பனவற்றுடன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு:- வீள. இல. 1344,
மே/பா. உதயன்.

(90678)


அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் மனு அனுப்ப

## 10 லட்சம் கையொப்பங்களை திரட்டும் நடவடிக்கை ஆரம்பம்

அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரும் முயற்சியை எதிர்க்கட்சிகளும் -

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் முயற்சியை அரசும் -

கைவிட வேண்டும் என்று கோரி பத்து லட்சம் பேரின் கையொப்பங்களைத் திரட்டும் நடவடிக்கை ஒன்று நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சமய, சமூக அமைப்புகள் ஒன்று சேர்ந்து பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடத்திய கூட்டத்தில் மேற்படி கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்றை அரசிடமும் எதிர்க்கட்சிகளிடமும் கையளிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை 10 லட்சம் பேரின் கையொப்பத்துடன் இரு தரப்புக்கும் அனுப்புவது என்றும் -

அந்தப் பணியை உடன் ஆரம்பிப்பது என்றும் - தீர்மானிக்கப்பட்டது.

குற்ற விசாரணைப் பிரேரணையில்

## ஜனாதிபதிக்கு எதிராக பத்து குற்றச்சாட்டுகள்

கொழும்பு,ஓக.5

ஜனாதிபதிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவரவிருக்கும் குற்ற விசாரணைப் பிரேரணையில் அதிகாரத் துஷ்பிரயோகம் தொடர்பாக பத்துக் குற்றச்சாட்டுகள் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரேரணை தயாரிக்கும் பணியில் ஈடுபட்ட ஐவர் கொண்ட குழு அந்தப் பிரேரணையின் நகலை உருவாக்கியுள்ளதாகவும் -

அதை எதிர்க்கட்சிகளின் பரிசீலனைக்கு அக்குழு அனுப்பியுள்ளது என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 20 - 04 - 1929 | 05 - 08 - 2000 |

## அமரர் ஞானப்பிரகாசம் சூசைப்பிள்ளை

(சிங்கம்)

பாசத்தின் திருவுருவமாய் பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி அரவணைத்த எம்
தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
ஓர் ஆண்டு அல்ல ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை
விட்டு என்றுமே மறையாதையா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

*இல.3 முதலாம் குறுக்கு வீதி,*
*பாஷையூர்,*
*யாழ்ப்பாணம்.*

மனைவி,மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

(90710)


## கொழும்பில் தங்குமிட வசதி

சகல வசதிகளுடன், குறைந்த செலவில், நிறைந்த சேவை புரியும் சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில் No. 89, HINNY APPUHAMY MAWATHA, Co - 13இல் அமைந்துள்ளது *"VANI IN"* லொட்ஜ். தங்குமிடம் தேவைப்படுவோர் மேற்படி விலாசத்தைப் பதிவுசெய்து வரலாம். மேலதிக விவரமறிய: T.P. 01-433182, 472582

(90555) - முகாமையாளர்.

## யாழ்-ஞானம்ஸ் ரெக்ஸ் ரைல்ஸ்

ஸ்தாபனத்தாரின்

### மாபெரும் ஆடிமாத சிறப்புத் தள்ளுபடி

சாறி வகைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ரசியன் சாறி | 1200/= | 800/= | பட்டுக்காஞ்சிபுரம் | 3300/= | 2800/= |
| நீலாக் சாறி | 1000/= | 750/= | பஞ்சாபி வகைகள் | 1000/= | 800/= |
| ஹொப்பர் சில்க் சாறி | 1250/= | 950/= | பெரிய கவுண் | 1200/= | 850/= |
| மோர்க்குறி சாறி | 1300/= | 1050/= | சிறிய கவுண் | 750/= | 550/= |
| ஜப்பான் சாறி வகைகள் | 950/= | 750/= | சிறிய ஸ்கேட்பிளவ்ஸ் | 680/= | 500/= |
| சிறிய ஸ்கேட் பிளவ்ஸ் | 600/= | 450/= | | | |

சேட் வகைகள் / ஸ்கேட்ஸ் அன் பிளவ்ஸ்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொக்ஸ் சேட் | 825/= | 700/= | பெரிய ஸ்கேட் அன் பிளவ்ஸ் | 1000/= | 700/= |
| " | 800/= | 650/= | " " | 750/= | 600/= |
| " | 400/= | 300/= | " " | 1200/= | 900/= |
| " | 750/= | 600/= | பெரிய வெல்வெற்ஸ் ஸ்கேட் அன் பிளவ்ஸ் | 1000/= | 850 = |
| " | 700/= | 550/= | | | |

துணி வகைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வெல்வெற் பிளேன் பிறின்ற் | 275/= | 210/= | ரைற்றானிக் பிறின்ற் | 140/= | 110/= |
| பட்டர் சில்க் பிறின்ற் | 130/= | 120/= | ரைற்றானிக் பிளேன் | 130/= | 110/= |
| டயானாப் பிறின்ற் | 110/= | 100/= | பட்டர் சில்க் பிளேன் | 80/= | 70/= |
| சலஞ்சர் பிளேன் | 80/= | 70/= | சீத்லை (சைனா) | 60/= | 50/= |
| | | | " " | 60/= | 40/= |

சூட்டிங்ஸ்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| றேக் பிளேன் | 380/= | 325/= | ரைற்றானிக் சூட்டிங் | 400/= | 350/= |

*மற்றும் சகலவிதமான புடைவைத் தினுசுகளும் மலிவு விலையில் விசேட கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்!*

## ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

18A, நவீன சந்தை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

*கிளை: யோகாஸ் புடைவையகம், யாழ்ப்பாணம்.*

(C/17497)

# தமிழர் வரலாற்றுச் சம்பவங்களில் பாட்டுடைத் தலைவனும் பாடிய புலவனும்

## இலக்கியச்சோலை

தாருகாவனத்து முனிவர்கள் கர்வங்கொண்டார்கள். சிவன் அவர்களது கர்வத்தை அடக்கப் பிட்சாடனர் வேடந்தாங்கினார். அச்சுந்தர வடிவைக் கண்ட முனிபத்தினிமார் தம் கற்பினை இழந்தனர். சீற்றங் கொண்ட தாருகாவனத்து முனிவர்கள் சிவனைக் கொல்வதற்காக அபிசார ஓமம் செய்து அந்த யாகத்தினின்றும் கொடிய பாம்புகள், அக்கினி, யானை, பன்றி, உடுக்கு, முயல்கள், புலி போன்ற பல பயங்கரமானவற்றை சிவனுக்கெதிராக அனுப்பினர். சிவன் அவற்றின் வலியொடுக்கித் தன் ஆபரணங்களாகவும் ஆடையாகவும் அணிந்து கொண்டார் என்பது புராண வரலாறு.

அபிசார ஓமம் என்பது ஒருவன் தான்கொண்ட அவமானத்தை வலிமை மிக்க ஒருவன் மீது வஞ்சந்தீர்க்கச் செய்யப்படுவது. மனிதன் ஏமாற்றப்படும் போதோ, அல்லது அவமானப்படுத்தப்படும்போதோ அவன் தனது மனத்தில் ஏற்படும் வெம்மையைத் தணிப்பதற்கான ஒரு வழிவகையாகும்.

இலங்கை வளத்தைப் பற்றித் தங்கத் தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்களைப் போலப் பாடியவர்கள் எவருமே இல்லை எனலாம். அவர் கன்னியாயில் உள்ள வெந்நீரூற்றுக்களைப் பாடும் போது-

*காதலனைப் பிரிந்தவளின் மனம் போல ஒன்று*

கவி பாடிப் பரிசு பெற்றான் மனம் போல ஒன்று என்று அதன் வெம்மைபற்றிப் படிப்படியாகப் பாடுகிறார். இதில் கவிபாடிப் பரிசு பெறான் மனம்போல என்பதை மட்டும் இவ்வாரம் நோக்குவோம்.

பாட்டுடைத் தலைவனைப் பலவாற்றாலும் பாடிப் பரிசில் பெறும் நோக்கோடு செல்கிறான் புலவன். அவன் சென்றவிடமோ மிக்க செல்வம் செழிக்கும் செல்வந்தன் வாழுமிடம். ஆனால் அவனோ லோபி எச்சிற்கையாற் காக்கையைக் கூட ஓட்டாதவன். புலவன் மனம் பொருமுகிறான். அவன் மனம் வெதும்புகிறான். ஏழையான புலவன் செல்வந்தனான அந்த லோபியை என்ன செய்துவிட முடியும்? அதற்காக வாளாவிருக்கமுடியுமா? புலவனும் மனிதனே. அவனது பொருமலுக்கு மருந்து அதற்கு சூடாமணி நிகண்டில் சில செய்யுள்கள் உள்ளன அதற்குப் பரிகாரமாக.

*பாட்டுடைத் தலைவன் தானே பரிசிலீயாதகாலை*
*மீட்டொரு பெரியனூர் பேர் வேறு சொல்லியுற்றிந்*
*தோக்கின்*
*ஈட்டு செல்வங்கள் பொன்றியீங்கிவன்றிருவுருமாய்ந்து*
*நாட்டியவனுக்ககாகு நவின்ற நூல் வழக்கிதாமே.*

"பரிசில் கொடாத உலோபியார்க்குச் செய்ய வேண்டியது யாதெனில் அச்செய்யுளில் பாட்டுடைத் தலைவனது பெயரை அச்செய்யுளினின்றும் நீக்கி அவனது ஊர்ப் பெயரையும் நீக்கி விட்டு, வேறொருவனது ஊரையும் பெயரையும் நாட்டிவிடின் பரிசில் கொடாதவனது செல்வம் யாவும் பின்னர் நாட்டப்பட்டவன் பாற் சென்றடையும்" என்று நூல் வழக்கு உள்ளது என்கிறது சூடாமணி நிகண்டு. இதற்கு மேலும் அபிசார ஓமம் செய்யும் பாணியில் புலவரை அவமதிக்கும் அறிவிலிகளுக்கும் பரிகாரம் கூறுகிறது அதே நிகண்டு அப்படியான அறிவிலிகளைப் பாவி என விளித்து

*பரிசிலீயாத பாவி பாமாலை செம்பூச்சூட்டி*
*வரியரவுறை வன்மீக மாகாளி முன்றிறன்னில்*
*உரிய நின் மனைப் புறத்திலொள்ளெரி கொளுத்தில்*
*வீயும்*
*தெரியுரோராண்டி லென்றே செப்பினன் முனிவன்*
*றானே*

## உதங்கா

பரிசில் கொடாத பாமாலையை எழுதிச் சிவந்த பூவினைச்சூடி பாம்புப் புற்றிலும், காளிகோயிலிலும் தன் மனைப்புறத்திலும், எரித்தால் பாட்டுடைத்தலைவன் ஒருவருடத்திலே இறப்பான் என்று அகத்திய முனிவர் கூறினார்.

எனவே பாட்டுடைத்தலைவன் புலவர்களை அவமதித்தாலோ பரிசில் கொடாதுவிட்டாலோ, புலவர்கள் மனம் வெதும்பும் மனநிலையையே பெரிதாக மதித்தனர். கூழுக்குப்பாடும் ஔவையாரின் பாடல்பெற்றவர்கள் செல்வச் சீமானான வரலாறும் தமிழ்கூறும் நல்லுலகில் இருக்கவே செய்தனர். வாழ்த்தி ஏற்றலும் போற்றிப்புகழ்தலும் வழமை போல தூற்றி மனவரி இறைத்தலும் தமிழ் நாட்டில் நிகழ்ந்ததென்பதற்கு பேரில தூரப்பட்ட பாடல்கள் சான்று பகர்கின்றன. ☆

# ஆலயங்களின் அழிவுக்குக் காரணமான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்

## இந்து குருமார் ஒன்றியம் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,ஓக.5

குடாநாட்டின் ஒரு பகுதி இன்றும் யுத்த பூமியாகவும், சுடுகாடாகவும் காணப்படுகின்றது. குறிப்பாக தென்மராட்சிப் பகுதி இந்து ஆலயங்கள் யாவும் உடைந்தும் சிதைந்தும் காணப்படுகின்றன. எனவே இவை அனைத்துக்கும் மூல காரணமான யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி சிவஸ்ரீ.ச.மகேஸ்வரக்குருக்கள் தலைமையிலான இந்துக் குருமார் குழுவொன்று கடந்த முதலாம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து அவரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தது. அந்த மகஜரிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒரு நாட்டில் ஆலய வழிபாடுகள் சரிவர நடைபெறாவிடில் - தெய்வங்களுக்கான பூஜைகள் முறைப்படி நடக்காவிட்டால் - நாட்டு மக்களுக்கும், அரசுக்கும் தீமை நேரிடும் என்றும், வளம் குன்றும் என்றும் ஆகம நூல்கள் கூறுகின்றன. மன்னாரிலுள்ள திருக்கேதீச்சரம், கீரிமலை நகுலேச்சரம், மாவிட்டபுரம் முதலிய பழைமை வாய்ந்த அருள் மிகுந்த ஆலயங்கள் அமைந்துள்ள பகுதிகள் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால் மக்கள் அங்கு சென்று வழிபாடு நடத்த முடியாமல் உள்ளது.

பொதுவாகவே குடாநாட்டில் ஆலய வழிபாடுகள், விழாக்கள் நடைபெறும் போது அதில் கலந்து கொள்ளச் செல்கின்ற குருமாரும், பக்தர்களும் வீதிகளில் ஆங்காங்கே நடைபெறும் இராணுவப் பரிசோதனைகள், தடைமுகாம்களில் பல்வேறு விரும்பத்தகாத அனுபவங்களைப் பெறவேண்டியுள்ளது. எனவே, இத்தகைய அசம்பாவிதங்கள் நீங்கி யாவரும் இயல்பாக எங்கும் சென்று வரக்கூடியதாகவும், எல்லா ஆலயங்களிலும் வழிபாடுகள் சரிவர நிகழக் கூடியதாகவும் நல்ல அமைதி நிலையை உருவாக்கித்தர வேண்டுமெனவும் தங்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம். அதற்கேற்ற வகையில் சகல தரப்பினரோடும் பேச்சுகள் நடத்தி சாந்தியையும், சமாதானத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்றும், அதற்கு எம்மாலான சகல ஒத்துழைப்புக்களையும் நல்குவோம் என்றும் இத்தால் தெரியப்படுத்துகின்றோம்.

இன்று நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கொடூர யுத்தத்தினால் இலங்கை வாழ் சகல தரப்பு மக்கள், பொருளாதார, சமய, சமூக, கல்வி, கலை, கலாசார ரீதியிலும் உடல், உளரீதியாகவும் பாதிக்கப்பட்டும், இழந்த இழப்புக்களை ஈடு செய்ய முடியாத நிலையிலும் வாழ்க்கையில் விரக்தியடைந்து காணப்படுகின்றனர். இவர்கள் நாட்டில் சமாதான சக வாழ்வு அமையுமா? என்ற ஏக்கத்துடன் எதிர்பார்த்து வாழ்ந்து வருகின்றார்கள். இடைப்பட்ட ஒருசில காலப்பகுதியில சமாதான முயற்சிகள் கூட பயனளிக்காதது நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட துரதிர்ஷ்டமே.


நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் இன்றைய பிரச்சினைகளில் எமக்கும் தொடர்புண்டு என்பதையும் மறுக்க முடியாது. எமது நாளாந்தக் கடமைகளுக்கும் இயல்பு வாழ்க்கைகளுக்கும் இந்த யுத்தம் பேரிடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே, எல்லோருக்குமே துன்பத்தைத் தருகின்ற இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து சாந்தியும், சமாதானமும் நிலவவும் நாட்டில் சுபீட்சம் நிலவவும், நாம் என்றும் பிரார்த்திக்கின்றோம்.

இடையிலேற்பட்ட ஒரு பேரழிவுக் காலத்தையடுத்துக் இன்று குடாநாட்டில் பல நூற்றுக்கணக்கான கோயில்கள் புனரமைக்கப்பட்டு புது மெருகுடன் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டு கும்பாபிஷேகங்கள் நடந்து நித்திய நைமித்தியங்கள் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். சமய விழாக்களும் கலை கலாசார நிகழ்வுகளும் சிறப்பாக நடக்கின்றன. அதற்கேற்ற வகையில் மாண்புமிகு இந்து கலாசார அமைச்சர் நிதியுதவி மற்றும் பல்வேறு உதவிகளையும் வழங்கி ஆதரவு தருகிறார். இந்துக்குருமாரும் மிக நல்ல முறையில் கௌரவிக்கப்பட்டு தகுந்தவொரு பீடாதிபதியையும் தேர்ந்தெடுத்துத் தமது கடமைகளைச் செய்ய ஊக்கமளிக்கப்படுகின்றனர். - என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஈ-7)



வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள மல்லாகம் கும்பலைக்குளம், பட்டினிக்கெதிரான நிறுவனத்தால் புனரமைப்புச் செய்யப்படுகின்றது. புனரமைப்புப் பணிகளைப் பட்டினிக்கெதிரான நிறுவன திட்ட உத்தியோகத்தர் க. இராசேந்திரம் மண்ணை அகழ்ந்து ஆரம்பித்து வைக்கிறார். விவசாய சம்மேளன உறுப்பினர்களும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: வலிகாமம் தெற்கு செய்தியாளர்)*

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்



(இன்று பன்னிரண்டாம் திருவிழா)

## நல்லூரா வந்துவிடு!

வெந்திங்கு குடிக்கின்ற செந்தமிழர் வாழ்விலங்க
சொந்தங்கள் ஒன்றுகூடிச் சந்தோசங் கொண்டாட
தந்தனத் தோம்போட்டுத் தமிழர் நாம் விடிவுபாட
வந்துவிடு நல்லூரா வசந்தத்தை தந்துவிடு!

வீதிகளில் நாதியற்று அல்லற்படும் நிலைமாறி
பீதியுடன் பண்பிழந்து பாழ்பட்ட தமிழர் நாம்
பாதிவழி முடியினிப் பரவசமாய் இன்புறச்
சேதியொன்று கொண்டு செந்தாரா வந்துவிடு!

- வி.பராபரன்.
யாழ். இந்துக் கல்லூரி.

## வேலிடு கையும் ஓங்காதோ?

சீர் பூத்த நல்லையம்பதியில்
சிறப்புற வீற்றிருக்கும் நல்லூரானே
போர் மேகம் எமைச் சூழ்ந்தழிக்க – நீ
பேசாது இருப்பது ஏனோ?
பார் எல்லாம் பக்தர் உனை
பரவசத்தால் தொழுது கைகுவிக்க
களம் பல கண்டு வென்ற – உந்தன்
வேலிடு கையும் ஓங்காதோ?

எம்.பிருந்தா - பிரதா

## நிமிர்த்தும் நெம்பு நீ!

பொங்கிவரும் உந்தனெழில் போதையூட்டுது - உந்தன்
புன்னகையில் எந்தன் போலி வேசம் தீய்ந்தது!.
மங்களங்கள் உந்தன் கோயில் காண... ஓங்குது - மனம்
மௌனமாக உந்தனோடு பேச ஏங்குது!

கண்களுக்குள் கல்லெழுத்துப் போல் இருக்கிறாய் - சூழும்
கவலைகளில் வேலெறிந்து நீ சிரிக்கிறாய்!
புண்களுக்குக் கனவில் வந்து புனுகு பூசுறாய் - வெற்றி
பூணவைத்தென் மாரில் மாலையாய் மணக்கிறாய்!

"எது நடக்க வேணும்" என்று அதை நடத்துறாய் - எந்தன்
எவ் அசைவும் உன் அசைப்பே! விதி வகுக்கிறாய்!
சுதிகள் சேர்தல் போலென் நினைவில் உனைப் பிணைக்கிறாய் - உன்முன்
சுருண்டமர்வேன்; நண்பனாக சுகம் விசாரிப்பாய்!

நிலையிலாத உலகியலில் மனந்தளம்பிடும் - வாழ்வின்
நிசங்கள் வம்பு பண்ணிப் பண்ணி எனை வதைத்திடும்.
கலங்கி அற்ப விடயத்துக்கும் உடல் பதறிடும் - உந்தன்
கருணை தானே அவற்றுளும் என் கடமை சொல்லிடும்.

நேற்று மெந்தன் பிழை திருத்தி நீ இயக்கினாய் - நேர்ந்த
நீசங்களுள் மோசம் போயிடாதும் மீட்டினாய்
சேற்றுள் சிக்கிடாது இன்றுஞ் சிறையெடுக்கிறாய் - நாளை
தெருவிலென்னை விடுவியா....? சீ... நீ நிமிர்த்துவாய்!

- த.ஜெயசீலன்.

## சூரிய வதனன் கந்தன்

மந்திர வேள்வி செய்யும்
மாமறை யாளர் போற்றும்
சுந்தரன் நல்லூர் வேலன்
சூரிய வதனன் எங்கள்
கந்தனாம் முருக வேளைக்
காதலித் தெண்ணி யேத்த
அந்தமில் பெருமையெல்லாம்
அருளுடன் இருவன்தானே!

- சக்திகிரீவன்.

## நல்லருளை நீயும் நல்கு!

அசுரர் செய் கொடுமையினால் அல்லலுற்ற அமரருக்காய்
பசும்பொன் வேலெடுத்த பாலகா - நீசரினால்
இவ்விடம் விட்டகன்று இன்னலுற்றோர் தமக்காய்
நல்லருளை நீயும் நல்கு!

- மட்டுவில் செ.சுதாகரன்.

# பல்லின மக்களும் வழிபடும் சின்னமடு மாதா அன்னை



அருள் சுரக்கும் சின்னமடு மாதா

புளியங்கூடல் - சின்னமடு மாதா ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவும், திருச்சுரூபப் பவனியும் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறுகின்றன.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் கத்தோலிக்கர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு இன்றைய திருவிழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்கின்றனர்.

அருட்திரு. ஞா.பிலேந்திரன்
கிறிஸ்தவ நாகரீகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

சின்னமடு மாதா ஆலயம் இலங்கையில் வாழும் கத்தோலிக்கர்களின புனித யாத்திரைத் தலங்களில் ஒன்று. கடந்த பல வருடங்களுக்கு முன்னர் நாட்டில் சுமுகமான சூழல் நிலவிய காலப்பகுதியில், இலங்கைத் தீவின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த கத்தோலிக்கர்கள், இந்துக்கள் ஒன்று திரண்டு தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிய தலம் இதுவாகும்.

ஆலயத்தின் வரலாறு வருமாறு:-

புளியங்கூடல் சின்னமடு புனித செபமாலை அன்னை ஆலயம் வேலணை - ஊர்காவற்றுறை வீதியில் புளியங்கூடச் சந்தியிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

புளியங்கூடல் சின்னமடு ஆலயத்தின் வரலாறு பற்றி நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிடுமிடத்து இப் பகுதியில் சுவாமி விஸ்திரினி அவர்களே முதன்முதலில் விசுவாசத்தைப் பரப பினார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

சுவாமி விஸ்திரினி அவர்கள் தீவுப் பகுதிக்குப் பொறுப்பாக நியமனம் பெற்று மறையைப் பரப்பியும், மக்கள் விசுவாசத்தை ஆழப்படுத்தியும் பணியாற்றிய காலத்திலேயே சரவணைக்கிராமத்தில் வாழ்ந்த வள்ளுவ வகுப்பாரும், பிராண உபகாரி வகுப்பாரும் கத்தோலிக்க மறையில் இணைந்து திருமுழுக்குப் பெற்றனர்.

ஊர்காவற்றுறை, நாரந்தனைப் பகுதிக்குப் பொறுப்பாக சந்திரசேகர அடிகள் (1893 - 1902) நியமனம் பெற்றார். விஸ்திரினி சுவாமியாரால் சரவணைக்கிராமத்தில் பல வருடங்களுக்கு முன்பு திருமுழுக்களிக்கப்பட்ட மக்களின் ஞானவாழ்வு பற்றி இவர் அறிய முற்பட்டபோது அவா களில் கட்டையன், நாவதன் என்போரையும் அவரைச் சார்ந்த ஒரு சிலரையும் தவிர, ஏனைய அதிகமானோர் கிறிஸ்தவ அனுட்டானங்களையும், கடமைகளையும், செப ஒழுங்குகளையும் மறந்து கத்தோலிக்கர் அலலாதார் போன்றே வாழ்ந்தனர் என்பதை அறிய முடிந்தது.

# இன்று வருடாந்தத் திருவிழா



அழிவடைந்தநிலையில் சின்னமடு மாதா ஆலயம்

இம்மக்களை மீண்டும் கத்தோலிக்க விசுவாசத்தில உறுதிப்படுத்த கத்தோலிக்க மறையைப் பற்றிய அறிவை ஆழப்படுத்த உறுதி பூண்டு சந்திரசேகரர் அடிகள் அதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கையில் ஈடுபட்டார்.

முதலில் அமைக்கப்பெற்ற கொட்டில் ஆலயம் தற்போதுள்ள ஆலயத்திற்கு மேற்கே பனைமரத் தூண்களைக் கொண்டு, கிடுகினால் தட்டிகள் கட்டப்பட்டு பனையோலையினால் வேயப்பட்ட ஆலயமாக அமைக்கப்பட்டது.

### திருச்சுரூபம் பெற்ற வரலாறு

கொட்டில் ஆலயத்தை அமைத்த சந்திரசேகர அடிகள், அடுத்த கட்டமாக ஆலயத்தில் வழிபாட்டிற்கு வேண்டிய செபமாலை மாதாவின் திருச்சுரூபம் ஒன்றைத தேடலானார். ஊர்காவற்றுறை புனிதயாகப்பர் ஆலயமும இவரது நிர்வாகத்தின் கீழும், கண்காணிப்பிலும் இருந்ததால் யாகப்பர் ஆலயத்தில் பாவனையற்றுக் கிடந்த மாதா சுருபததைப் பெறுவது நலமெனத் தீமானித்து அந்த ஆலயத்துக்கான பொறுப்பாளர் தொமமைக் குட்டி மூலம் மாதாவின் சுருபத்தைப் பெற்றார்.



இன்று புதுப் பொலிவுடன் காட்சிதரும் சின்னமடு மாதா ஆலயம்

### முதற் திருப்பலி

புதிதாக அமைக்கப்பட்ட கொட்டில் ஆலயத்தில் முதற்திருப்பலி, ஆடிமாதம் 14ஆம் திகதி 1895 ஆம் ஆண்டு ஒப்புக்கொடுக்கப்பட்டது. இவ்வாலயத்தில் இதே ஆண்டு ஆவணி மாதம் 4ஆம் திகதி இரண்டாம் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

புதிதாக அமைக்கப்பட்டு, திருச் செபமாலை அன்னைக்கு அர்ப்பணிக கப்பட்ட இக்கொட்டில் ஆலயம் வெகுவிரைவில் தீவுப்பகுதியின் பல பாகங்களிலிருந்தும் பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்கு ஆன்மீக அருள்வளம் அளித்து ஒன்றிணைக்கும் திருத்தலமாக மாறியது.

தீவுப்பகுதியின் எல்லாப்பாகங்களிலிருந்தும் மக்கள் வருகை தந்தார்கள் எனவும் குறிப்பாக சனிக்கிழமைகளில் பெரும் எணணிக்கையில் கூடினார்கள் எனவும் அறிய முடிகின்றது.

ஒருகாலத்தில் மனித நடமாட்டமற்ற வரண்ட பாலைவனம போன்று கவனிப்பாரற்றுத் திறந்த வெளியாகக் காணப்பட்ட இடம் அன்னை மரியின் ஆசீர் வேண்டிப் பெரும் கூட்டமாக மககள் கூடும் பகுதியாக மாறிப் புதுப்பொலிவு பெற்றது.

1896ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் ஆவணி மாதம் 5 ஆம் திகதி செபமாலை மாதாவின் திருவிழா கொண்டாப்பட்டு வருகின்றது. ஆரம்ப காலங்களில் திருவிழாவில் சரவணைப் பகுதியை அண்மித்த நாரந்தனை, சுருவில், கரம்பொன், ஊர்காவற்துறை, சாட்டி, அல்லைப்பிட்டி ஆகிய கிராமங்களின் மக்கள் மட்டும் பங்குபற்றினர். தொடர்ந்து குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த மக்கள் இந்த வழிபாடுகளில் பங்குகொண்டனர்.

காலக் கிரமத்தில் நாட்டிலுள்ள பெரும் யாத்திரைத் தலங்களான மருதமடு, தலைவில்லு ஆகிய திருத்தலங்களுக்கு மக்கள் கூடுவது போன்று யாழ். மறைமாவட்டத்திலுள்ள பல பங்குகளிலிருந்து மட்டுமன்று, நாட்டின் ஏனைய பகுதிகளிலிருக்கும் மக்கள் இத்திருத்தலத்திற்கு வருகை தந்ததாக சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிடுகின்றார்.

இத் திருததலத்தில் மக்கள் பக்தி விசுவாசத்தில் வளர்ச்சியும் உறுதியும் பெற்று அன்னையின் அருள்வளம் நிறையப்பெற்று உள்ளத்து அமைதி பெற்றுச் செல்லும் யாத்திரைத்தலமாக விளங்கியதால் சின்னமடு - மருதமடு போன்ற ஒரு சிறிய திருத்தலம் - என்னும் பொருள்பட அழைக்கப் படலாயிற்று. அன்று முதல் இன்று வரையும் இப்பகுதி சின்னமடு என்றே அழைக்கப்படுகின்றது. ஆயர் யூலன் அவர்கள் இத்திருத்தலத்தை மறை மாவட்டத்தின் யாத்திரைத்தலமாக 1909 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தினார்.

இவ்வாறு பல்வேறு வழிகளில் வளர்சியுற்ற சின்னமடுமாதா ஆலயம் 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி முதல் இடம்பெற்ற வன் செயல்கள் காரணமாக பலத்த சேதமடைந்தது.

பின்னர் வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை மற்றும் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு வழங்கிய நிதியுதவியினைக் கொண்டு இந்த ஆலயம் புனரமைக்கப்பட்டு இன்று கம்பீரமாகக் காட்சியளிக்கிறது.

இவ்வாலயத்தின் புனரமைப்புப் பணியில் கூடிய ஆர்வம் காட்டிய யாழ். ஆயர் அதிவண.தோமஸ் சவுந்தரநாயகம் ஊர்காவற்றுறை - நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. J.X.செல்வநாயகம், பங்குத்தந்தை அருட் திரு. எறிக்றோசான், சுருவில் - புளியங்கூடல் கிராம அலுவலர் மு.விஜயரத்தினம் மற்றும் ந.முத்துக் கிருஷ்ணன், எஸ்நற்குணலிங்கம் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். ✝

## பருத்தித்துறையில் இரு கப்பல்கள்

நெல்லியடி,ஓக.5

கொழும்பு துறைமுகத்திலிருந்து, உணவுப் பொருள்கள், சிமெந்து போன்றவற்றை ஏற்றிய இரு கப்பல்கள் கடந்தவாரம் பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடைந்தன.

'கிரிந்த' கப்பலில் 2 ஆயிரத்து 600 மெற்றிக்தொன் உணவுப் பொருள்களும், 'ஹெந்தல' கப்பலில் 2 ஆயிரம் மெற்றிக்தொன் சிமெந்தும் ஏற்றி வரப்பட்டிருப்பதாக துறைமுகப் பொறுப்பதிகாரி க.சிவலிங்கம் தெரிவித்தார். (ஐ-109)

## இலத்திரனியல் கருத்தரங்கு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 7 தொடக்கம் 11 வரையான வகுப்புகளில் விஞ்ஞானபாடம கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இலத்திரனியல் கருத்தரங்கு எதிர்வரும் ஓகஸ்ட 18ஆம் திகதி யாழ் பல்கலைக் கழக பௌதிகவியல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்ளவுள்ள விஞ்ஞான பாட ஆசிரியர்களின் விவரங்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.


# நன்றியுடன் பாராட்டுகின்றோம்

## பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயில் பரிபாலன சபை

மேற்படி ஆலயத் திருத்த வேலைகளுக்காக சென்ற வருடம் 2 லட்சம் ருபாவும் இந்த வருடம் 2 லட்சம் ருபாவும் ஒதுக்கி இந்தவருடப் பணத்தில் ஒரு இலட்சம் ருபாவினையும் உடன் வழங்கி உதவியமைக்காக



மாண்புமிகு அமைச்சர் கௌரவ
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



கட்சியின்
நாடாளுமன்ற உறுப்பினர்
கௌரவ
**திரு.கே.வி.குகேந்திரன்(ஜெகன்)**
அவர்களுக்கும்



வலி.மேற்கு பிரதேச சபைத்
தலைவர் **திரு.ந.திரிலோகநாதன்**
அவர்களுக்கும்
எமது நன்றியைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C/17709) - பரிபாலன சபையினர்.



# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு

அன்னை மடியில் 18 - 02 - 1906



ஆண்டவன் அடியில் 16 - 07 - 2001

## அமரர் கதிரேசு சுப்பிரமணியம்

(சோதிடர்)

16.07.2001 திங்கட்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (05.08.2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*258, கோயில் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (90835)

- திருமதி நாகரெத்தினம் சுப்பிரமணியம் குடும்பத்தினர்.



# இலங்கை வங்கியின் 62 வருட சேவை நிறைவையொட்டி

**இலங்கை வங்கி யாழ்.மேற்றரக் கிளை நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் போது விசேட கருமபீடம் ஒன்றை**
**375,பருத்தித்துறை வீதி; நல்லூரில்** (மாநகர சபை கல்யாண மண்டபச் சந்தியில்)
**06.08.2001 முதல் 20.08.2001 வரை நடத்தும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.**

※ சேமிப்புச் சான்றிதழ்
※ சிறுவர் சேமிப்புக்கணக்கு (காப்புறுதியுடன்)
※ சாதாரண சேமிப்புக் கணக்கு
※ நிலையான வைப்பு
※ மகளிர் பொற்கணக்கு (காப்புறுதியுடன்)
※ வதிவோர் / வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு
※ வெளிநாட்டு உண்டியல் ஏற்றுக்கொள்ளல்

*போன்ற சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.*

விசேட கருமபீடத்தில் ஆரம்பிக்கப்படும் கணக்குகள், சான்றிதழ்களுக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும.

※ தங்க நகை கடன் சேவை ※ வெளிநாட்டு நாணயங்களை இலங்கை ருபாவில் மாற்றும் சேவை யாழ்.மேற்றரக் கிளையில் நடைபெறுகின்றது.

**மேற்றரக் கிளை,**
**யாழ்ப்பாணம்.** (C-17708)

சிரேஷ்ட முகாமையாளர்,
பணியாளர்கள்.

## நல்லூர் ஆலயச் சுற்றாடலில்

# வீதித்தடைகளை அனுசரிக்க மறுப்பவர்களினால் தொல்லை!

யாழ்ப்பாணம், ஓக. 5

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலில் ஏற்படுத்தப்பட்டுள்ள வீதித் தடைகளின் ஊடாக அத்துமீறி உட்பிரவேசிக்க முயல்வோரின் தொல்லைகள் தொடர்ந்து இடம்பெற்றுவருவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

வருடந்தோறும் மஹோற்சவ காலத்தில் இவ்வாறான வீதித் தடைகள் ஏற்படுத்தப்படுவது வழமை. அதனை அனுசரிக்க மறுப்போரின் தொல்லையும் தொடர்கின்றது. வீதித் தடைப் பகுதியில் கடமையாற்றுகின்ற தொண்டர் அமைப்புப் பிரதிநிதிகளுடன் வாய்த் தர்க்கம் புரிதல், வாகனங்கள் மற்றும் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களுடன் பலவந்தமாக உட்பிரவேசிக்க முனைதல் போன்ற செயல்களால் ஆலயச் சூழலில் அமைதிக்குப் பங்கம் ஏற்படுகின்றது.

மஹோற்சவ காலம் முடிவடையும் வரையும் சகல அடியார்களும் வீதித்தடைகளைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஆலய உற்சவ கால ஏற்பாட்டுக் குழு கேட்டுள்ளது.

ஆலயச் சுற்றாடலில் அடியார்களால் தவறவிடப்பட்ட பொருள்கள் சில கண்டெடுக்கப்பட்டு இந்து விடுதியில் அமைந்துள்ள உற்சவகாலப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும்—

உரியவர்கள் தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும்— தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை ஆலயச் சுற்றாடலில் கண்டெடுக்கப்படும் பொருள்களை மேற்படி பணிமனையில் ஒப்படைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

(உ-10)

## தாச்சி ஆட்டம்

வலி. வடக்கு, ஓக 5

யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் தாச்சி சுற்றுப் போட்டியில், இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு வலி. தெற்கு பிரதேச சபை மருதனார்மடம் திறந்த வெளி அரங்கு மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில், இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உரும்பிராய் வைத்தீஸ்வரா விளையாட்டுக்கழகம் விளையாடும்.

(உ-86)

## வாக்காளர் அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக. 5

யாழ். மாவட்ட வாக்காளர்களுக்கு விநியோகம் செய்வதற்கான வாக்காளர் அட்டைகள் மாவட்ட தேர்தல் அலுவலகத்தினால் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் ஒப்படைக்கப்படவுள்ளன.

தபாலகத்தில் ஒப்படைக்கப்படும் இந்த அட்டைகள் யாவும் உடனடியாகத் தரம் பிரிக்கப்பட்டு எதிர் வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்பு உரியவர்களுக்கு விநியோகித்து முடிக்கப்பட வேண்டும் என்று மாவட்ட தேர்தல் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-10-9)

## பச்சிலைப்பள்ளி மக்களுக்கு நிவாரணப் பத்திரம்

யாழ்ப்பாணம் ஓக. 5

பச்சிலைப்பள்ளியிலிருந்து இடம்பெயர்ந்து வலிகாமம், வடமராட்சிப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு இருமாத நிவாரணப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வசிப்பவர்களுக்கு—நாளை திங்கட்கிழமை யாழ். நகரில் இயங்கும் பளைப்பிரதேச செயலக உப அலுவலகத்திலும், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வழமையான இடங்களிலும் வைத்தும் இது வழங்கப்படும் என்றும்—

வடமராட்சியில் வசிப்பவர்களுக்கு எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை புலோலியில் இயங்கும் பளைப்பிரதேச செயலகத்திலும், மறுநாள் 9ஆம் திகதி வியாழக்கிழமை வழமையான இடங்களிலும் வைத்து வழங்கப்படும் என்றும்—

பிரதேச செயலர் ச. புத்திசிகாமணி அறிவித்துள்ளார்.

(உ-7)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 5

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று அதிகாலை 5 மணிக்கு திருமுறை வீதிப்பஜனையும் அதைத் தொடர்ந்து காலை 8மணிக்கு குருமூர்த்த ஆலயத்தில் விசேட பூசை, ஆராதனை, வழிபாடுகளையடுத்து 9 மணிக்கு விசேட சமயதீட்சை வழங்கும் வைபவமும் நடைபெறும்.

அதன் பின்னர் 'கந்த புராணம்' புராண படனம் காலை 9.30 மணிமுதல் நண்பகல் 12 மணி வரைக்கும் பிற்பகல் 3.00 மணிமுதல் 4.30 மணி வரைக்கும் நடைபெறும்.

(ஐ)

★ ★ ★

நல்லூர் ஆலய உற்சவத்தையொட்டி அகில இலங்கைக் கம்பன் கழகம், கம்பன் கோட்டத்தில் நடத்திவரும் சமயச் சொற்பொழிவுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00மணிக்கு செஞ்சொற் செல்வர் இரா. செல்வவடிவேல் 'கந்த புராணம்' பற்றிய சொற்பொழிவு நிகழ்த்துவார்.

(ஐ-86)

★ ★ ★

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் நல்லூர் துர்க்காமணி மண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் தெய்வீக இசையரங்கு நிகழ்ச்சியில், இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 6.00 மணிக்கு மேரி சறோஜா ஜஸ்டினின் பாட்டுக்கச்சேரி பக்கவாத்தியம் சகிதம் நடைபெறவுள்ளது.

(ஐ-86-17)

★ ★ ★

நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் தினமும் மாலை 5-15 மணிக்கு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா நிகழ்த்தி வரும் 'கம்பராமாயண' தொடர் சொற்பொழிவில், இன்று 'தாடகை வதம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

(ஐ)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 5

அரியாலை சி. சிவதாசன் எழுதிய ''இசை நாடகக் கவிக்குயில் சந்திரமதி வி.கே. இரத்தினம்'' எனும் நூல் வெளியீட்டு விழா யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் கலாநிதி க. குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

வெளியீட்டுரையை செ. மெட்ராஸ் மெயிலும் மதிப்பீட்டுரையை எழுத்தாளர் சொக்கனும் நிகழ்த்துவர்.

(ம)

# புனரமைப்பு பணிகளை துரிதமாக்க தனியான நிர்வாகக் கட்டமைப்பு

மூளாய், ஓக. 5

யாழ், மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு வேலைகளைத் துரிதப்படுத்துவதற்காக தனியான நிர்வாக கட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளது.

இதற்கான சகல முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. தற்போது மேற்படி பணிகளை மேற்கொள்வதில் ஏற்பட்டு வரும் தாமதங்களைத் தடுப்பதற்கும் இவ்வேலைகளைத் துரிதகதியில் மேற்கொள்வதற்கும் வசதியாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக யாழ். மாவட்டத்தின் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளைக் கையாளும் தகுதிவாய்ந்த அதிகாரியாக புதிய செயற் திட்டப் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார். இவருடன் மேலும் சில உதவி செயற் திட்டப் பணிப்பாளர்களும் நியமிக்கப்படவுள்ளனர். ஏற்கனவே உதவி செயற்திட்ட பணிப்பாளராக சிரேஷ்ட நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஏனைய பதவிகளுக்கும் மிக விரைவில் நியமனங்கள் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இனிவரும் காலங்களில் யாழ் குடாநாட்டில் செயற்படுத்தப்படவிருக்கும் அனைத்து புனர்வாழ்வு, புனரமைப்புச் செயற்திட்டங்களும் இப் புதிய நிர்வாக கட்டமைப்பினூடாகவே நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றன.

இவ்வாறான ஏற்பாடுகள் வடக்கு— கிழக்கின் ஏனைய மாவட்டங்களிலும் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

(ம-98)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஓக. 5

தலையாழி ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை பரிசளிப்பு விழா இன்று மாலை 4-00 மணிக்கு ஆலயமுன்றிலில் இடம்பெறும்

பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி அதிபர் அ. ஸ்ரீக்குமரனும் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற நீதிபதி மு. திருநாவுக்கரசுவும் கலந்துகொள்வர்

(ம)

## சமய சந்நிதிகளில்

சண்டிலிப்பாய், ஓக. 5

இளவாலை, மாரீசன்கூடல் புனித சுவிந்தார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

நாளை திங்கட்கிழமை நற்கருணை ஆராதனையும், செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுத்தலும் நடைபெறவுள்ளன. இளவாலை பங்குத் தந்தை அருட்திரு. பி. பிரான்சிஸ் பொனிபஸ் அடிகளார் பூசைகளை நிறைவேற்றி வருகின்றார்.

(ஐ-135)

★ ★ ★

சில்லாலை புனித கதிரைமாதா ஆலய வருடாந்த உற்சவம் நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 14 ஆம் திகதி நற்கருணை ஆராதனையும், 15 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருப்பலிப் பூசையும், அதனைத் தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும் நடைபெறும்

உற்சவத்தைச் சிறப்பாக நடத்துவதற்கான ஒழுங்குகளை சில்லாலை பங்குத் தந்தை அருட்திரு. றெஜி இராஜேஸ்வரன் அடிகளார் செய்துள்ளார்.

(ஐ-135)

## தாவடியில் தேடுதல்

யாழ்ப்பாணம், ஓக. 5

தாவடி, கொக்குவில் பகுதிகள் நேற்றுக் காலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டன. கே. கே. எஸ். வீதி வழியே சென்ற வாகனங்கள் அனைத்தும் கடுமையாகச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

(உ-139)

# இன்பருட்டி மீனவர் போராட்டம் நேற்றுக் கைவிடப்பட்டது

தென்மராட்சி, ஓக. 5

பருத்தித்துறை இன்பருட்டி பகுதி கடற்றொழிலாளர் சங்கத்தினர் கடந்த ஒரு வாரமாக மேற்கொண்ட பகிஷ்கரிப்புப்போராட்டம் நேற்றுக் கைவிடப்பட்டது.

படை அதிகாரிகள், கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற பேச்சுக்களைத் தொடர்ந்து பகிஷ்கரிப்புப் போராட்டம் கைவிடப்பட்டது நேற்று முதல் மீனவர்கள் மீண்டும் கடலில் தொழில் செய்வதற்குச் சென்றனர்.

கடந்த மாதம் 25 ஆம் திகதி இப்பகுதிக் கடலில் கடற்படைப் படகு மீன்பிடிப் படகு மீது மோதிய சம்பவத்தையடுத்து இன்பருட்டி, வியாபாரிமூலை ஆகிய பகுதி மீனவர்கள் சக்கோட்டையிலுள்ள படை முகாம் ஊடாக மீன்பிடிக்கச் செல்லவேண்டுமென படைத் தரப்பினரால் அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இப்பகுதியிலிருந்து தொழிலுக்குச் செல்லும் 45 கட்டுமரங்களும் கரையில் ஏற்றப்பட்டு மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதற்கு மறுத்து பகிஷ்கரிப்பில் குதித்தனர்.

நேற்றுமுன்தினம் பருத்தித்துறை படைமுகாமில் இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்து இப்பகுதி மீனவர்கள் தமது அடையாள அட்டைகளை சக்கோட்டையிலுள்ள முகாமில் ஒப்படைத்து பாஸ் பெற வேண்டும் என்றும்—

பின்னர் தத்தமது பகுதியிலிருந்து கடலுக்குச் செல்ல முடியும் —என்றும் தீர்மானிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இப் பகுதி மீனவர்கள் முன்னர் இன்பருட்டி முகாமில் பாஸ் பெற்று தொழிலுக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-117)

## ஏழாலை வாசிக்கு 40 ஆயிரம் ரூபா அபராதம்

கசிப்பு உற்பத்திக்கான 125 போத்தல் கோடா வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டி மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி பா. சுப்பிரமணியம் முன்னிலையில் சுன்னாகம் பொலிஸாரால் ஆஜர் செய்யப்பட்ட நபர் ஒருவருக்கு 40 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

ஏழாலை தெற்கைச் சேர்ந்த கி. செல்வரட்ணம் என்பவருக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

(க-86)

## சுற்றுலா சென்ற சமயம்

# மினி பஸ்ஸிலிருந்து வீழ்ந்து பாடசாலை மாணவன் காயம்

தென்மராட்சி, ஓக. 5

ஓடிக்கொண்டிருந்த மினி பஸ்ஸிலிருந்து தவறி வீழ்ந்த பாடசாலை மாணவன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சுற்றுலாவுக்காகச் சென்ற மினி பஸ்ஸின் மிதி பலகையில் பயணம் செய்தவரே தவறி வீழ்ந்தவராவார்.

இவரது சேர்ட் பொக்கற்றில் வைக்கப்பட்டிருந்த அடையாள அட்டை வெளியே வீழ்ந்தபோது அதனைப் பிடிக்க முயன்றுவான் மிதிபலகையிலிருந்து தவறி வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய மாணவனான சண்முகநாதன் கவண்டயன் (வயது 16) என்பவரே காயமடைந்தவராவார்.

புத்தூர் நவக்கிரிப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

(ம-117)

# 2 வருட தடுப்புக்காவலில் இருந்த கைதடி இளைஞனுக்கு பிணை

தென்மராட்சி ஓக. 5

அவசரகாலச் சட்டத்தின் கீழ் இரண்டு வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த கைதடி இளைஞரை பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிவான் அனுமதித்தார்.

கைதடியைச் சேர்ந்த வ. ஜெயக்குமார் (வயது 24) என்னும் இளைஞரே பிணையில் விடுவிக்கப்பட்டவராவார்.

தடுத்து வைக்கப்பட்டு இரண்டு வருடமாகியும் இந்த இளைஞர் மீது வழக்குத்தாக்கல் செய்ய சட்டமா அதிபர் திணைக்களம் முன்வராததையிட்டு சந்தேக நபரின் சட்டத்தரணி நீதிமன்றில் ஆட்சேபம் தெரிவித்தார். இதனை அடுத்து நீதிவான் இவ் இளைஞரை 25 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையிலும், செல்ல அனுமதியளித்தார்.

(ம-117)

## சுட்டெண்களை பார்வையிடலாம்

யாழ்ப்பாணம், ஓக. 5

சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலிருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவோர் தமது சுட்டெண்களை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இயங்கும் சாவகச்சேரிக் கல்விக் கோட்டத்திலும் கரவெட்டி ஞானசார கல்வி நிலையத்திலும் பார்வையிடலாம் எனவும்—

பரீட்சை நிலையம் கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் அமையும் எனவும்—

அதிபர் அறிவித்துள்ளார்.

(ம)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கைரேகை பார்த்தல்

கல்வி, விவாகம், வெளிநாடு, பிரயாணம், தொழில், உடல் நோய்கள், கஷ்டங்கள், வீட்டில் நிம்மதியின்மை ஆகியவற்றுக்கு கீழ்க்கண்ட விலாசத்தில் பலன்கூறி உங்களுக்கு நாராயணன் அருளால் விமோசனம் அளிக்கப்படும் சோதிநாகரத்தினம், மெய்கண்டான் வதி, இளவாலை வடக்கு, இளவாலை. (90753)

## இசை வகுப்புகள்

எமது நியூ ரிதம்ஸ் இசை மன்றில் ஓகன், கிற்றார், ஹார்மோனியம், மெலோடிக்கா புதிய பிரிவு வகுப்புகள். ஞாயிறு (05-08-2001) 3.00p.m. ஆரம்பமாகின்றது. R.கீதன், 691, ஸ்ரேசன் றோட், கோண்டாவில். (90785)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட லான்சர் 90 (செல்வ் ஸ்ராட் மொடல்) மோட்டார் சைக்கிளும், றலி சைக்கிளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.**34/7**, செட்டித்தெரு, நல்லூர். (90767)

## பிறிமா குஞ்சுகள்

**PRIMA SAMEERA** இன புறொயிலர் குஞ்சுகள், **PRIMA** இன வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும் உடன் விற்பனைக்கு உண்டு. விலை **60/-** தொடர்பு:- வை.சிவகுமார், இல.461, நாவலர்வீதி, ஆனைபந்தி அல்லது றஞ்சிதன் சுபகணநாதன் பண்ணைவீதி, மாலிசந்தி அல்வாய். (90807)

## புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. மற்றும் புறொயிலர் கல்பேட்ஸ் இறைச்சிக் கோழிகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். Broiler 1kg - 150/=. தொடர்பு:- ராஜீவ் ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.3529, 2867. (90800)

## படிவங்கள்

கூட்டுறவுப் பரிசோதகர், நிலஅளவையாளர், எழுதுநர், கணக்குப் பதியுநர், பண்டகசாலைக் காப்பாளர் பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் விற்பனையாகின்றன. விண்ணப்ப முடிவு திகதி: 27.08.2001 பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். **(C/17649)**

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்ப செவ்வாயுள்ள 1967 பட்டதாரியான அழகான பெண்ணுக்கு வெளிநாட்டு மணமகனும், சகோதரன் 1967 கிரக பாவமற்ற டாக்டருக்கு பட்டதாரிப் பெண்ணும், 1960 ஆசிரியருக்கு சைவபோசனப் பெண்ணும் தேவை. முழுவிவரம் ஜாதகத்துடன், தொடர்பு:-விள.இல.1342, மே/பா, உதயன். (90421)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூ.350/=) தொடர்பு: பாரதி, 430,காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 3081. **(C-17642)**

## வீடு விற்பனைக்கு

ஏகாம்பரம் கந்தசாமி என்பவருககுச் சொந்தமான 10பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-ஏ.கந்தசாமி, அடைக்கலம் தோட்டவீதி, வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டை (மாவடி சந்திக்கு அருகில்) (90660)

## வீடு வாடகைக்கு

இல.17, பிறவுண் வீதியில் அமைந்துள்ள சகல வசதிகளையும் கொண்ட வீடு உடன் வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு:சிவஞானம் ஸ்ரீகணேசன் கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு. (90831)

## கார் விற்பனைக்கு

6ஸ்ரீ 3787 சுப்பர் மின்ஸ் கில்மன் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ.இரவீந்திரதாசன், 18/4(66), சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம். (90833)

## மாடி வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி மாரியம்மன் வீதியில் யாழ்.பல்கலைக்கழகம், சென்றல் நேர்சிங் ஹோமுக்கு சமீபமாக உள்ள மாடிவீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:- கிழமை நாள்களில் **P.Ramanathan, 7,Temple Rd, Jaffan. Tel. 2383** **(C/17707)**

## விற்பனைக்கு

சொனி **T.V (2032), 20"** விற்பனைக்குண்டு. தொடர்பு:இல.59, சிவன்புது வீதி, நல்லூர். (90780)

ஒரு நாள் பிறிமா வெள்ளை பேடு, புறொயிலர் குஞ்சுகள், Gold fish, டைகர் பப் ஸ்காப் வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: கிருஷ்ணா (பாம் வளவு), மானிப்பாய். (90713)

மிகவும் நல்ல நிலையில் உள்ள புதிய மொடல் **SUZUKI. G.S -125** (சில்வர் சைலென்சர்) **RED** கலர் **JAPAN** மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- திங்கள் முதல் சனி வரை. இல. 79, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். **T.P. NO.**2312 (இலங்கை வங்கி முன்பாக) (90738)

நல்லின கிறேட் டேன் (**Grate Dane)** நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு தொடர்பு:-88/3, பத்திரகாளி கோயிலடி லேன், கேசாவில் பிள்ளையார் றோட், நாச்சிமார் கோயிலடி. ஞாயிறு முழுநாளும் ஏனைய நாள்களில் நண்பகல் 12.00 மணி தொடக்கம் 1.00 மணி வரை. (90829)

மிகவும் நல்ல நிலையிலுள்ள **(RALEIGH with Gear)** துவிச்சக்கர வண்டி, **Video Recorder (Model SABA),** குளிர்சாதனப் பெட்டி என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. சிறீதரன், இல.42, சந்தணமாதா கோயில் வீதி, (பேக்கரிக்கு அருகில் உள்ள ஒழுங்கை) பண்டத்தரிப்பு; சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (90841)

டிஸ்க் அன்டனாவுக்குரிய புதிய மொடல் **EURO - 8800 ADP - 2CT** அனலொக் டிஜிட்டல், பொய்சினர் **EURO STAR** றிசிவர் **L.NBF EURO STAR** விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். **T.P. 2863/3327.** (90837)

## படிவம்

மொரட்டுவ பல்கலைக்கழக அனுமதி கட்டட பொருளாதாரம் **(Quantity Surveying)** அனுமதிக்கான படிவம் விற்பனையாகிறது. விவரம் எம்மிடம் பார்வையிடலாம். நாயகபாலன், மானிப்பாய். (90843)

## உடன் விற்பனைக்கு

அதி உன்னத நிலையில் **(Super Condition)** இல் உள்ள **EY-18 Robin** ரக **ORIGINAL BORE 25 Size** இல் மீளமைக்கப்பட்டுள்ளது. நீர் இறைக்கும் இயந்திரமும் **Er-Model RALEGH Cycle (Super condition)** விற்பனைக்குண்டு. தொடர்பு:- 'மகேஸ்தான்' அரசடி றோட், வதிரி, கரவெட்டி. (90813)

## தவறிவிட்டது

117,கிராம விஸ்தரிப்புத்திட்டம் திருநெல்வேலியைச் சேர்ந்த சத்தியநேசன் தர்மிளா என்பவருடைய விசேட அ.அட்டை (இல. 0902011883) திருநெல்வேலி பாற்பண்ணைக்கும் திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்திலே ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (90827)

## காணவில்லை

"ரூபகிரி" கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் என்னும் முகவரியைச் சேர்ந்த து.வரதராசா (வரதன்) என்பவரது வளர்ப்பு நாயை (நிறம் **Silver Grey)** 1.8.2001 தொடக்கம் காணவில்லை. நாயைக் கண்டவர்கள் மேற்படி முகவரியுடன் உடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். **(C-17711)**

## இறைச்சிக் கோழிகள் விற்பனை

**Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் (பாதிக்கோழிகள் உட்பட) சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். 19,முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச்சந்தையடி நல்லூர். (90775)

இறைச்சிக்கோழி **(BROILERS)**, கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (90527)

கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A (F.M.Spl)
***A/L 2002***
ஒப்படைக் கணக்கு
*ஆரம்பம்:* 6 - 8 →Mon. 3 p.m.
BEACON
*வெலிங்டன் சந்தி*
(90836)

# பாராட்டி நன்றி கூறுகின்றோம்
## மயிலியற்புலம் கந்தசாமி கோயில், அராலி வடக்கு.

எமது ஆலய புனரமைப்புக்கு முதற்கட்டமாக பத்து லட்சம் ரூபா நிதியை ஒதுக்கி அதில் ரூபா ஐந்து லட்சத்தை உடன் வழங்கிய வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரம், இந்து சமய கலாசார அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான



மாண்புமிகு கௌரவ அமைச்சர்
**திரு.K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்,



ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட
பிரதம அமைப்பாளரும்
நாடாளுமன்ற உறுப்பினருமான கௌரவ
**திரு.கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களுக்கும்,



வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவரும்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் இந்து சமய
விவகாரங்களுக்குப் பொறுப்பானவரும், அதன்
வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும்
வலி.மேற்கு இந்து ஆலயங்களின் மகா சபை
போஷகருமாகிய
**உயர்திரு.ந.திரிலோகநாதன்**
**J.P.U.M அவர்களுக்கும்**

04.08.2001 அன்று எமது கோயிலைப் பார்வையிட்டு எமது ஆலய வளர்ச்சியில் அக்கறை கொண்டு நிதியுதவி வழங்கியமைக்காக எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இவர்களின் பணி மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

(90838) **-ஆலய பரிபாலன சபை-**

# பாடசாலைக்கு நிதி உதவக் கோரிக்கை

ஷெல் வீச்சுக்களால் சேதமடைந்த கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் கட்டடங்களைப் புனரமைப்பதற்கு 12 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யுமாறு வித்தியாலய அபிவிருத்திச் சபையினர் வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரியுள்ளனர்.

இப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதையடுத்து இவ் வித்தியாலயம் செயற்பட்டு வருவதால் புனரமைப்பு வேலைகள் அவசரமாக மேற்கொள்ள நிதி உதவி கோரியுள்ளதாக சங்கச் செயலாளர் ச.வரதராசா தெரிவித்தார்.(ஐ-117)

இணுவில், கோண்டாவில்
காரைக்கால் சிவன் தேவஸ்தானம்
## திருக்கல்யாண உற்சவமும்
## *பாராட்டுவிழாவும்*

நாள்:- **இன்று (05.08.2001) ஞாயிற்றுக்கிழமை**
நேரம்:- பிற்பகல் 3மணிக்கு

**இவ்வருடம் காரைக்கால் சிவன் வருடாந்த மகோற்சவத்தில் கந்தபுராண தொடர் விரிவுரையாற்றிய நல்லாசிரியர், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்**
அவர்களுக்குப் பாராட்டுவிழா

### பாராட்டுரைகள்

தலைவர்: **பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா**
(யாழ்.பல்கலைக்கழகம்)
ஆசியுரை: 1. **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள்**
(ஆதீன முதல்வர்,திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்)
2. **பிரம்மஸ்ரீ சிறீஸ்கந்தராஜாக்குருக்கள்**
(மகோற்சவகுரு)
வாழ்த்துரை:1. **திரு.செல்லப்பா நடராசா**
(மூத்த பத்திரிகையாளர்)
2. **ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம்**
(காரியதரிசி, பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை)
3. **திரு.க.தேவராஜா**
(தலைவர், வணிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
பதிலுரை: **விழாநாயகர்.**
நன்றியுரை: **திரு.செ.இலகுநாதன்**
மங்கள இசை: **'கலாபூஷணம்' நாதஸ்வர ரத்தினா K.R.சுந்தரமூர்த்தி குழுவினர்.**

குறிப்பு: காலை 8மணிக்கு 'அபிஷேக ஆராதனைகள் ஆரம்பமாகும்.

(90839) காரைக்கால் சிவன் தேவஸ்தானம்

# மனம் நிறைந்த நன்றி கூறி வாழ்த்துகின்றோம்

**புங்குடுதீவு புனித சவேரியார் ஆலய**
புனரமைப்புப் பணிக்கு இரண்டு லட்சம் ரூபா நிதியுதவி ஒதுக்கீடு செய்து அதில் ஒரு லட்சம் ரூபா நிதியை உடன் வழங்கி உதவியமைக்காக



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர்
நாயகமும் மாண்புமிகு கௌரவ
அமைச்சருமான
**திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதம
அமைப்பாளருமான கௌரவ
**திரு.கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும்



எமது மக்களின் வளர்ச்சியில் பெரிதும்
உதவுகின்ற ஈ.பி.டி.பியின் தீவக
அமைப்பாளரும் ஊர்காவற்றுறை
பிரதேச சபைத் தலைவருமான
**உயர்திரு.ந.மதனராஜா (மனோ)**
அவர்களையும்



ஈ.பி.டி.பியின் வேலணை அமைப்பாளரும்
வேலணைப் பிரதேச சபைத் தலைவருமான
**உயர்திரு.ந.கருணாகரகுருமூர்த்தி** J.P.U.M.
**(மோகன்) அவர்களையும்**



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் புங்குடுதீவு
அமைப்பாளரும், ஊர்காவற்றுறை
பிரதேச சபை உறுப்பினருமான
**உயர்திரு.சி.சிவராசா (போல்)**
அவர்களையும்

மனம் நிறைந்த நன்றிகளுடன் பாராட்டி நன்றி கூறி புங்குடுதீவு புனித சவேரியார் அருளாசி கிடைக்க வேண்டி வாழ்த்துகின்றோம்.

புங்குடுதீவு புனித சவேரியார் ஆலய
பங்குத் தந்தையும், பங்கு மக்களும்,
புனித சவேரியார் கடற்றொழிலாளர்
கூ.சங்கத்தினரும்.
(90842)

## விசேட கட்டணச் சலுகையில்

புதிய கணனிக் கற்கை நெறிகள்

**ஆரம்பம்: 11.08.2001 சனி பகல் 10.00 மணி**

பயிற்சி நெறி ஒன்றுக்கு
ரூபா **750/=** மட்டுமே!

*அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்....*

*இச் சலுகை இப் பிரிவுக்கு மட்டுமே.*

வார நாள்களிலும் வார இறுதி நாள்களிலும் வகுப்புக்கள் நடைபெறும்.

**INSTITUTE OF INFORMATICS STUDIES**
(Affiliated to Irish International University, Dublin.)
100, Clock Tower Road, Jaffna.
T.P :021 - 2831 (C-17717) EMAIL : iis@sltnet.lk



# HEALTH STUDIES UNIT

## Faculty of Medicine

Applications are invited from eligible candidates for the under - mentioned full - time courses, scheduled to commence in September 2001, at the Faculty of Medicine, University of Jaffna.

- Diploma in Community Health — 2 years
- Diploma in Medical Laboratory Technology — 2 years
- Diploma in Physiotherapy — 2 years
- Certificate in Pharmacy — 1 year

The course will be conducted in English.

*Qualifications*

1. Age: 18 - 28 years
2. A pass in 4 subjects at the G.C.E. A/L examination. A pass in 3 subjects for those who sat for the first time in 2000. The subjects offered should have been Physics, Chemistry, Botany, Zoology, or Biology.
3. The aggregate marks obtained should make the candidate eligible for admission to a University in Sri Lanka.
4. A good knowledge of English is essential.

*Course Fee*

The course fee will be Rs.7000.00 for the one year course and Rs.15,000.00 for the two years courses.

Application forms could be obtained from the Health Studies Unit, on production of a receipt of payment of Rs.25.00 at the Shroff's counter, University of Jaffna.

Applications are to be sent to *Coordinator, Health Studies Unit, Faculty of Medicine, University of Jaffna, Jaffna, on or before 15.08.2001.*

Note:

*Applicants who had applied in response to advertisement of 27.04.2001 need not apply. Applicants who were unable to appear for the interview on 04.08.2001 because they had to appear for the G.C.E. A/L examination are requested to contact the Coordinator, Health Studies Unit and obtain a new date for interview.*

(90846)


## எழுதுநர் நேர்முகப் பரீட்சை

உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்திற்கு எழுதுநர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் நடைபெறும்.

விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன. (ம)

## பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.5

திருநெல்வேலி அபிராமி முன்பள்ளி பாலர் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு சைவப் பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக பலாலி ஆசிரியர் கலாசாலை உப அதிபர் சிவ.மகாலிங்கம் கலந்து கொள்வார். (ம)

## பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள் பெற ஏற்பாடுகள்

வடமராட்சி கிழக்கு,ஓக.5

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்தபோது பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தை தவறவிட்ட 16 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தினை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை தவறவிட்ட மாணவர்கள் அவ்வப்பகுதி கிராமசேவை அலுவலர்களிடம் விணப்படிவங்களை [illegible] தமது பாடசாலை அதிபர் [illegible] ஊடாக அவற்றை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் கையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் இந் நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளது.

(ம-182)


## நன்றி நவிலல்

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்ற தேவி மஹோற்சவத்தின் போது ஆலயத்திற்கு வருகைதந்த அடியார்களின் நன்மை கருதி பத்து நாள்கள் தொடர்ச்சியாக யாழ். பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து ஆலயத்திற்கு நேரடி பஸ் சேவையை நடத்திய வடபிராந்திய போக்குவரத்துச் சபை காரைநகர் சாலை முகாமையாளர் **திரு. கே. உருத்திரசுந்தரம்** அவர்களுக்கும் அனைத்து ஊழியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆதீனகர்த்தாக்கள்,
*காரைநகர்.* (C/17720) ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம்.



## யாழ். இலக்கிய வட்டம்

## நூல் கொள்வனவும் செயற்குழுக்கூட்டமும்

- கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நூல் வெளியீட்டிற்கும் நூல் கொள்வனவுக்குமாக எட்டு லட்சம் ரூபாவை யாழ். இலக்கிய வட்டத்திற்கு ஒதுக்கித் தந்துள்ளார்.
- நூல் கொள்வனவிற்குத் தமது ஆக்க இலக்கிய நூலை வழங்க விரும்பும் இல[illegible]கர்த்தாக்கள் நூலின் ஒரு பிரதியுடனும்,
- யாழ். இலக்கிய [illegible]ட உறுப்பினர்கள் தவறாதும்,

07.08.2001 செ[illegible]க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆரியகுளத் தடியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்துக்குத் தவறாது சமுகந்தரவும்.

செங்கை ஆழியான்,
(90852) தலைவர், யாழ். இலக்கிய வட்டம்.



## புலமைப்பரிசில் - 2001

பயிற்சிப் பரீட்சை - 3

நாட்டில் உள்ள எமது சகல பரீட்சை நிலையங்களிலும் இன்று நடைபெறுகின்றது.

★ முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களை உள்ளடக்கிய மாதிரிப் பரீட்சை 1, 2, 3 வினாத் தாள்களை உடன் பெற்றுக்கொள்ளலாம். (90850)

**BOND பரீட்சைப்பகுதி**



## லஷ்சுமி இணுவில்

M.G.R., லதா, நாகேஷ்
மற்றும் பலர் நடிப்பில்

**உரிமைக்குரல்**

தினசரி 10.30, 2.00, 5.00
(90854)



## ராஜா யாழ்ப்பாணம்

(C/17644)

இளையதளபதி விஜய்,
தேவயானி, சூர்யா, வடிவேலு
மற்றும் பலர் நடிப்பில

**ப்ரண்ட்ஸ்**

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)



## நாகம்ஸ் சுன்னாகம்

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
அஜித்
(மாறுபட்ட 7வேடங்களில்)
வசுந்தராதாஸ், மீனா நடித்த

**சிட்டிசன்**

(ரீல்ஸ்) (90855)
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)



## 40 நாட்களா ?



என்ன செய்யலாம்

ஆம். இதற்காகத்தான் நாம் இரு மாத பாடத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம் இவற்றில் இன்றே உங்கள் குழந்தைகளை இணைப்பதன் மூலம் இவ்விடுமுறையை அவர்களுக்கும் பயனுள்ளதாக்குங்கள். **Tution** கல்வியைப் பாதிக்காத வகையில் பல பிரிவுகளாக இவை திட்டமிடப்பட்டுள்ளன.
1வது பிரிவு இன்று 10.00 மணிக்கு,
மேலதிக விபரங்களிற்கு

*STP Computer World (Pvt.) Limited.*
Tel : 2674, E.Mail:stpedu@hotmail.com,
54A, Palaly Road, Kantharmadam, Jaffna


## நீங்காத நினைவலைகள்

| 17ஆம் ஆண்டு | | | முதலாம் ஆண்டு | |
|---|---|---|---|---|
| தோற்றம் 03 - 07 - 1948 |  | மறைவு 11 - 01 - 1984 | அல்வை மண்ணில் உதயம் 13 - 02 - 1981 |  | இந்திய மண்ணில் மறைவு 15 - 08 - 2000 |

அமரர்
**தம்பிமுத்து துரைராசா**
(பொலீஸ் சார்ஜன்ட் - இல,14291)

அமரர்
**துரைராசா ராஜ்குமார்**
(ராசுப்பழம்)

*அப்பா! உமது நினைவால் மதிகலங்கி*
*நிற்கும் வேளையில் இன்று உங்கள் மைந்தனையும்*
*அரவணைத்துக் கொண்டீரோ? – இன்று*
*தனிமரமாய் நானடையும் வேதனையை யாரறிவார்?*

உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆலடிப்பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.

*'பொன்முருகன் இல்லம்'*
*மனோகரா,*
*அல்வாய்.* (C-17713)

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி மற்றும் உற்றார், உறவினர்கள்.

## ஆறாத்துயரில் நாமும்....

எமது நண்பி **செல்வி சுகந்தினி சுப்பிரமணியம்**
(முதலாம் வருட கலைப்பீட மாணவி, யாழ். பல்கலைக்கழகம்)
அவர்களின் பாசமிகு அன்னை

**திருமதி தர்மலக்ஷ்மி சுப்பிரமணியம்**

அவர்கள் இந்த வையத்தையும் தனது இல்லத்தையும் விட்டுப் பிரிந்து சென்றமையால் ஆறாத்துயர் சுமந்துநிற்கும் அன்னாரின் குடும்பத்தவரோடு நாமும் துயர் பகிர்கின்றோம்.

*ஆத்திசூடி வீதி,*
*கந்தர்மடம் மேற்கு,*
*யாழ்ப்பாணம்.* (90848)

"ஹப்பி ஹவுஸ்",
விடுதி நண்பிகள்.

## 3 ஆம் ஆண்டு நினைவு

தோற்றம் 09 - 03 - 1910



மறைவு 05 - 08 - 1998

**அமரர் வைரவப்பிள்ளை வெற்றிவேல்**

(வெற்றிவேல் மாஸ்டர், பருத்தித்துறை)

அரசாங்கப் பணியினிலே அளவிலாத் தமிழர்
சிறப்பான பதவிபெற வழிசமைத்த நம்மாசான்
வறியவர் வாழ்வினில் வசந்தம் தந்தவன்
மறைந்தாலும் மறந்திடோம் இவ்வுலக வாழ்வுள்ள வரை!

வெற்றிவேல் மாஸ்டர் நலன்புரி
*பருத்தித்துறை.* (C/17714) பழைய மாணவர் சங்கம்.

ITP JAFFNA SRI LANKA

# INFORMATION TECHNOLOGY PARK

**ESTABLISHED BY**

**RESETTLEMENT & REHABILITATION AUTHORITY OF THE NORTH**

***A STATUTORY BODY UNDER***

**Ministry of Development, Rehabilitation and Reconstruction of the North and Tamil Affairs North & East.**

***272, Stanley Road, Jaffna.***

# தகவல் தொழில் நுட்பப் பூங்கா

**272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.**

T.P No: 021- 3641 | Web: www.itpark-jaffna.org | e-mail: itp@sltnet.lk

**அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் அடுத்த பருவத்திற்குரிய கணனிக் கற்கை நெறிகளுக்கும், இதர சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் செயற்திட்டங்களில் விரும்பியவற்றில் இணைந்து கொள்வதற்குரிய விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.**

## 1. IT TRAINING CENTRE

12 வயதிற்கு மேற்பட்ட எந்தவொரு நபரும் **IT** பயிற்சி நிலையத்தில் இடம்பெறும் கீழ்வரும் கணனி பயிற்சி நெறிகளில் இணைந்துகொள்ள முடியும்.

**பயிற்சிநெறிகள்**

| Certificate Courses: | Duration | Fee |
|---|---|---|
| Packages | 2 months | 700/= |
| Languages | 3 months | 1500/= |
| Others:- | | |
| i) Internet & E-Mail | 3 months | 1500/= |
| ii) Hardware | 3 months | 1500/= |

## 2. CYBER CAFE

யாழ்.மாவட்ட மக்கள் இணையச் சேவையினைப் பெற்றுக்கொள்ளும் வகையில் **IT Park** இல் அங்கத்தவராகச் சேர்ந்துகொள்ளமுடியும். ஏற்கனவே அங்கத்தவர்களாக இணைந்து கொண்டவர்கள் இன்னும் சில வாரங்களில் இணையச் சேவையில் இணைந்துகொள்வதற்குரிய பூர்வாங்க ஏற்பாடுகள் முடியும் தறுவாயில் உள்ளன என்பது குறிப்பிடத்தகக தாகும்.

## 3. CYBER KIDS STUDIES

9 தொடக்கம் 12 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவிகள் இத்திட்டத்தில் இணைந்து கொள்வதன் மூலம் கணனி சம்பந்தமான பல கற்கை நெறிகளைப் பயில முடியும். இவர்களுக்குரிய பாடத்திட்டத்தில். **Ms-Word, Ms-Excel, Ms-Powerpoint, Ms-Paint** ஆகியவை உள்ளடங்கலாக கணனி சம்பந்தமான அடிப்படை விடயங்கள், **Multimedia operation** என்பவை கற்பிக்கப்படும்.

காலப்பகுதி - 3 மாதங்கள்

## 4. CYBER KIDS MEMBERSHIP

6 தொடக்கம் 12 வயதிற்குட்பட்ட மாணவர்கள் மேற்படி திட்டத்தின் ஊடாக **IT Park** இல் தம்மை அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்களிற்கு சிறுவயதில் இருந்தே கணனிக்கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்துகின்ற முயற்சி இதுவாகும். காலப்பகுதி 5 மாதங்கள் ஆகும.

### பெற்றோர்கள் கவனத்திற்கு!

**பெற்றோர்கள் தம் பிள்ளைகளை இத்திட்டத்தில் இணைப்பதற்கு முன்மாதிரியாக செயற்படுவதன் மூலமும், ஊக்குவிப்பதன் மூலமும் அவர்கள் எதிர்காலத்தில் சுயமாகவே கணனித் துறையில் ஆர்வமாகச் செயற்படுவதற்கு உளவியல் ரீதியாக தூண்டப்படுவார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். அங்கத்தவர்களாக இணைத்துக் கொண்டுள்ள தம்பிள்ளைகளை பயிற்சிக்காகக் கூட்டிவரும் பெற்றோர்கள் விரும்பினால் கணனி சம்பந்தமான அடிப்படை விடயங்களை இலவசமாகக் கற்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

### விண்ணப்பப்படிவங்கள்

**August** மாதம் 6ஆம் திகதி தொடக்கம் **September** மாதம் 5ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

### பதிவு செய்தல்

**August** மாதம் 6ஆம் திகதி தொடக்கம் **September** மாதம் 5ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படும் சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக்கட்டணம் ரூபா 250/- மட்டும்.

### முதலாம் தவணைக் கட்டணம்

**September** மாதம் 7ஆம் திகதி தொடக்கம் **September** மாதம் 23ஆம் திகதிக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

**முதலாம் தவணைக் கட்டணம் செலுத்தும்போது மாணவர் இணைந்துகொள்கின்ற பிரிவுகளுக்குரிய நேர அட்டவணை வழங்கப்படும்.**

**மாணவர்கள் ஆவலுடன் எதிர் பார்த்திருந்த அரச அங்கீகாரத்துடன் கூடிய Diploma பயிற்சி நெறிகள்:**

**பயிற்சிநெறிகள் ஆரம்பம்: 24-09-2001**

| Title | Duration | Fee |
|---|---|---|
| Diploma in MS-Office | 5 months | 2800 /= |
| Diploma in Desktop publishing | 5 months | 2400 /= |
| Diploma in Hardware Technology | 6 months | 3200 /= |

**CENTER FOR INFORMATION TECHNOLOGY**

*For further Details:* Course Manager

*Information:* Director.

(C/17701)

## யாழ்ப்பாணம் கல்விக்கல்லூரி மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,ஓக5

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி இரண்டாம் வருட மாணவர்களை நாளை திங்கட்கிழமை கல்லூரிக்கு வருமாறு பீடாதிபதி தி.கமலநாதன் அறிவித்துள்ளார்.

இறுதிப் பரீட்சை விண்ணப்பப்படிவங்களில் கையெழுத்திட வேண்டும் என்பதால் சகல மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு அவர் தெரிவித்துள்ளார். (ம)

## நிதி ஒதுக்குமாறு கோரிக்கை

தென்மராட்சி,ஓக.5

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் அரச சார்பற்ற நிறுவனங்களால் கடந்த வருடம் அமைக்கப்பட்ட முகாம் கொட்டில்களை புனரமைப்பதற்கு நிதிஒதுக்கீடு செய்து தருமாறு பருத்தித்துறை பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினர் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சரைக் கோரியுள்ளனர்.

கடந்த வருடம் தற்காலிகமாக அமைக்கப்பட்ட இந்தக் கொட்டில்கள் தற்போது சேதமடைந்து காணப்படுவதால் இங்கு தங்கியுள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் -

மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இவற்றினை திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வது அவசியம் என்றும் -

அவர்கள் அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர். (ம-117)

## குருபீடாதிபதிக்கு வாழ்த்துப்பத்திரம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.5

சர்வதேச இந்து மத குருபீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய பரம்பரைக்குருவும், சுதுமலை சிவகாமி அம்பாள் ஆலய பிரதம குருவுமான சிவஸ்ரீ சம்புகேஸ்வர மகேஸ்வரக் குருக்களுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வாழ்த்துப் பத்திரம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

அண்மையில் கொழும்பில் சர்வதேச இந்துமத குருபீடாதிபதிக்கு வரவேற்பு அளிக்கும் நிகழ்வு கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் வைத்து திணைகளத்தின் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் பீடாதிபதிக்கு வாழ்த்துப்பத்திரம் வழங்கிக் கௌரவித்தார். (ஐ-7)

எமது Five Star வீடியோ CD வெளியீடு
★ ஆனந்தம்
★ மிடில் கிளாஸ் மாதவன்
★ கிருஷ்ணா கிருஷ்ணா
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (C/17722)

BIT தெரிவுப் பரீட்சை முடிவுகள்
BIT தெரிவுப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் முடிவுகள் இன்று வெளியாகவுள்ளன. பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் உடனடியாக உங்கள் சுட்டெண்ணுடன் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.
(C/17718)

கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி
பொருளியல்II
பணம், வங்கி, விலைமட்டம்
2002 A/L பி.ப. 2.30
2003 A/L பி.ப. 4.00
யாழ்.S.வரதராஜன்
ஆரம்பம்: 06.08.2001 (திங்கள்)
(90819)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.08.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.